(*a*) whether the Government have received any representation from the All-India Handloom Board during 1960-61 for the restriction of the production of mill cloth to 400 crores yards per annum ; and

---

[a] Printed as Appendix II on page 63 infra.

(b) the steps taken by the Government to prevent mills competing against handlooms in regard to the production of cloth?

THE HON. SRI V. RAMAIAH : (a) No Sir.

(b) The following are the important measures taken by Government of India.

(i) Reservation of certain fields of production exclusively to handlooms;

(ii) Pegging of production of cloth by mill sector;

(iii) Ban imposed on the installation of additional looms in composite mills.

SRI N. K. PALANISAMI : மில்லிலே 400 கோடி கெஜம் துணிக்கு மேல் உற்பத்தி செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டதா ? அப்படியானால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI V. RAMAIAH : The Planning Commission has proposed a target production of 9,300 million yards of cloth in the Third Plan. Of this, 5,800 million yards has been allotted to the mill sector and the balance of 3,500 million to the decentralised sector.

SRI N. K. PALANISAMI : இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் கைத்தறி மில் துணியுடன் போட்டி போட முடியாது. காரணம் ஆட்டமேட்டிக் லூம்ஸ் போன்றவைகளினால் குறைவான விலையில் அதிகமாக உற்பத்தி செய்வதால், அவைகளோடு போட்டி போட முடியாத நிலையில் இருப்பதால் ரிபேட்டைக் குறைக்காமல் கைத்தறித் துணிக்கு இன்னும் அதிக ரிபேட் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : இப்போது இருக்கும் ஏற்பாட்டின் படி கைத்தறி மில்லோடு போட்டி போட வேண்டிய அவசியம் இல்லை கைத்தறி துணி உற்பத்திக்கு போதுமான அளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

SRI A. GOVINDASAMY : சில ரகங்கள் கைத்தறிக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். திரு. ராஜாஜி நம் மாநிலத்தில் முதன் மந்திரியாக இருந்தபோது 40–ம் நெ. வேஷ்டி, புடவை உற்பத்தி முழுவதையும் உற்பத்தி செய்வதை கைத்தறிக்கு ஒதுக்கவேண்டுமென்று இந்த சபை ஏகோபித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டது. அதை மீண்டும் வற்புறுத்தி நடவடிக்கை எடுப்பதைப்பற்றி பரிசீலனை செய்யப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : கைத்தறிக்கு ஒதுக்கப்பட்டிருப்பது ஒரு ரகம் மட்டுமல்ல. என்னுடைய தகவல்படி பல தினுசுகளை கைத்தறிக்கு ஒதுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Co-operative Farming Societies (Chingleput district)

DEPUTY SPEAKER : As the hon. Member who gave notice of Question No. 1817 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 1817 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) with reference to the answer to Unstarred Quesion No. 388 on 25th April 1960, the reasons for the 'no loss, no profit' and 'loss' sustained by six out of nine of the Co-operative Farming Societies in Chingleput district;

25th September 1961]

(*b*) how long they are in this position; and

(*c*) the capital invested, the area of land cultivated and the nature of financial help given by the Government to each of the societies ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*), (*b*) & (*c*) A paper[a] furnishing the information is placed on the table of the House.

State Transport—Discourtesy shown by conductors

* 1818 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government have received any complaints regarding the discourtesy shown by the conductors and drivers in the Government Transport buses to the passengers; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Yes, Sir. Each complaint regarding the discourtesy shown by traffic crew towards passengers is enquired into and whenever an offence is proved appropriate punishment with reference to gravity of the offence is awarded.

SRI A. A. RASHEED : ஐயா, மரியாதை வாரம் தவிர மற்ற வாரங்களில் மரியாதையாக நடக்கவேண்டுமென்று பஸ் கண்டக்டர் களுக்கும், பஸ் டிரைவர்களுக்கும் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : உத்திரவு இல்லாமலேயே மரியாதையாக நடந்துகொள்ளவேண்டும். மரியாதையில்லாமல் நடந்து கொண்டால், அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், விசாரணை நடத்தி, மரியாதையில்லாமல் நடந்துகொண்டிருந்தால் தக்க தண்டனை கொடுக்கப்படும்.

SRI A. GOVINDASAMY : பஸ் டிரைவர்களும், கண்டக்டர்களும் தவறு செய்தார்கள் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது ? எவரிட மிருந்து தகவல் அறியப்படுகிறது ?

THE HON. SRI V. RAMAIAH : எல்லாவற்றையும் விசாரித்துப் பார்த்து தவருக நடந்துகொண்டதாகத் தெரிந்தால் தான் தண்டனை கொடுக்கப்படும். அப்படியில்லாமலிருந்தால் தண்டனை கிடையாது.

SRI T. P. ELUMALAI : பஸ் டிரைவர்களிடத்திலும் கண்டக்டர் களிடத்திலும் பஸ் பிரயாணிகள் மரியாதைக் குறைவாக நடந்துகொள்வ தாகப் புகார் வந்திருக்கிறதா ? அதன் பேரில் நடவடிக்கை எடுத்திருக் கிருர்களா ?

THE HON. SRI V. RAMAIAH : அது போல எந்த விதமான கம்ப்ளெயிண்ட்ஸும் என்னிடத்தில் இல்லே.

Mineral Deposits

* 1819 *Q*.—SRI N. M. VELAPPAN (on behalf of SRI N. R. THIYAGARAJAN) : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் ராஜ்யத்தில் எங்கெங்கு என்னென்ன கனிப்பொருள்கள் இருக்கின்றன ?

---

[a] Printed as Appendix III on pages 63-65 infra.

[25th September 1961

(இ) இதுபற்றி ஆராய்ச்சியின் முடிவு என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The hon. Member is referred to the Geological Survey of India reports and District Gazetteers for the information sought.

Bridge across the Kuzhithurai river (Gnarampuzha)

* 1820 *Q.*—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Works be pleased to state whether there is a proposal to construct a bridge on the Kuzhithurai river at Gnarampuzha, in Pacode village, Kanyakumari district?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.

SRI M. WILLIAM : May I know whether this will be included in the Third Plan ?

THE HON. SRI P. KAKKAN : It is included in the Third Plan.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note:*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.)

II—GOVERNMENT BILL.

THE MADRAS LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) BILL, 1960 (L.A. BILL NO. 8 OF 1960) AS AMENDED BY THE JOINT SELECT COMMITTEE

Clauses 50 to 53 were put and carried.

Clause 54.

DEPUTY SPEAKER : The question is—

"That Clause 54 do stand part of the Bill".

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment :—

For Clause 54, substitute the following :—

"54. *Government not to take over surplus land in certain cases.*—Where the contract of tenancy provides for the continuance of tenancy in respect of any surplus land, the authorized officer shall not take into account such land for acquisition for public purpose and vest it in the Government."

The amendment was duly seconded.

SRI R. SRINIVASA IYER : Sir, I move the following amendment :—

For sub-clause (2) substitute the following :—

"(2) No compensation shall be payable to an intermediary."

The amendment was duly seconded.

(b) the steps taken by the Government to prevent mills competing against handlooms in regard to the production of cloth?

THE HON. SRI V. RAMAIAH : (a) No Sir.

(b) The following are the important measures taken by Government of India.

(i) Reservation of certain fields of production exclusively to handlooms;

(ii) Pegging of production of cloth by mill sector;

(iii) Ban imposed on the installation of additional looms in composite mills.

SRI N. K. PALANISAMI : மில்லிலே 400 கோடி கெஜம் துணிக்கு மேல் உற்பத்தி செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டதா? அப்படியானால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI V. RAMAIAH : The Planning Commission has proposed a target production of 9,300 million yards of cloth in the Third Plan. Of this, 5,800 million yards has been allotted to the mill sector and the balance of 3,500 million to the decentralised sector.

SRI N. K. PALANISAMI : இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் கைத்தறி மில் துணியுடன் போட்டி போட முடியாது. காரணம் ஆட்டமேட்டிக் லூம்ஸ் போன்றவைகளினால் குறைவான விலையில் அதிகமாக உற்பத்தி செய்வதால், அவைகளோடு போட்டி போட முடியாத நிலையில் இருப்பதால் ரிபேட்டைக் குறைக்காமல் கைத்தறித் துணிக்கு இன்னும் அதிக ரிபேட் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : இப்போது இருக்கும் ஏற்பாட்டின் படி கைத்தறி மில்லோடு போட்டி போட வேண்டிய அவசியம் இல்லை கைத்தறி துணி உற்பத்திக்கு போதுமான அளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

SRI A. GOVINDASAMY : சில ரகங்கள் கைத்தறிக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். திரு. ராஜாஜி நம் மாநிலத்தில் முதன் மந்திரியாக இருந்தபோது 40-ம் நெ. வேஷ்டி, புடவை உற்பத்தி முழுவதையும் உற்பத்தி செய்வதை கைத்தறிக்கு ஒதுக்கவேண்டுமென்று இந்த சபை ஏகோபித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டது. அதை மீண்டும் வற்புறுத்தி நடவடிக்கை எடுப்பதைப்பற்றி பரிசீலனை செய்யப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : கைத்தறிக்கு ஒதுக்கப்பட்டிருப்பது ஒரு ரகம் மட்டுமல்ல. என்னுடைய தகவல்படி பல தினுசுகளை கைத்தறிக்கு ஒதுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Co-operative Farming Societies (Chingleput district)

DEPUTY SPEAKER : As the hon. Member who gave notice of Question No. 1817 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 1817 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) with reference to the answer to Unstarred Quesion No. 388 on 25th April 1960, the reasons for the 'no loss, no profit' and 'loss' sustained by six out of nine of the Co-operative Farming Societies in Chingleput district;

25th September 1961]

(*b*) how long they are in this position; and

(*c*) the capital invested, the area of land cultivated and the nature of financial help given by the Government to each of the societies ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*), (*b*) & (*c*) A paper[a] furnishing the information is placed on the table of the House.

State Transport—Discourtesy shown by conductors

* 1818 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government have received any complaints regarding the discourtesy shown by the conductors and drivers in the Government Transport buses to the passengers; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Yes, Sir. Each complaint regarding the discourtesy shown by traffic crew towards passengers is enquired into and whenever an offence is proved appropriate punishment with reference to gravity of the offence is awarded.

SRI A. A. RASHEED : ஐயா, மரியாதை வாரம் தவிர மற்ற வாரங்களில் மரியாதையாக நடக்கவேண்டுமென்று பஸ் கண்டக்டர் களுக்கும், பஸ் டிரைவர்களுக்கும் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : உத்திரவு இல்லாமலேயே மரியாதையாக நடந்துகொள்ளவேண்டும். மரியாதையில்லாமல் நடந்து கொண்டால், அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், விசாரணை நடத்தி, மரியாதையில்லாமல் நடந்துகொண்டிருந்தால் தக்க தண்டனை கொடுக்கப்படும்.

SRI A. GOVINDASAMY : பஸ் டிரைவர்களும், கண்டக்டர்களும் தவறு செய்தார்கள் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது ? எவரிட மிருந்து தகவல் அறியப்படுகிறது ?

THE HON. SRI V. RAMAIAH : எல்லாவற்றையும் விசாரித்துப் பார்த்து தவறாக நடந்துகொண்டதாகத் தெரிந்தால் தான் தண்டனை கொடுக்கப்படும். அப்படியில்லாமலிருந்தால் தண்டனை கிடையாது.

SRI T. P. ELUMALAI : பஸ் டிரைவர்களிடத்திலும் கண்டக்டர் களிடத்திலும் பஸ் பிரயாணிகள் மரியாதைக் குறைவாக நடந்துகொள்வ தாகப் புகார் வந்திருக்கிறதா ? அதன் பேரில் நடவடிக்கை எடுத்திருக் கிறார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : அது போல எந்த விதமான கம்ப்ளெயிண்ட்ஸும் என்னிடத்தில் இல்லை.

Mineral Deposits

* 1819 *Q*.—SRI N. M. VELAPPAN (on behalf of SRI N. R. THIYAGARAJAN) : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் ராஜ்யத்தில் எங்கெங்கு என்னென்ன கனிப்பொருள்கள் இருக்கின்றன ?

---

[a] Printed as Appendix III on pages 63-65 infra.

[25th September 1961

(இ) இதுபற்றி ஆராய்ச்சியின் முடிவு என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The hon. Member is referred to the Geological Survey of India reports and District Gazetteers for the information sought.

Bridge across the Kuzhithurai river (Gnarampuzha)

* 1820 *Q*.—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Works be pleased to state whether there is a proposal to construct a bridge on the Kuzhithurai river at Gnarampuzha, in Pacode village, Kanyakumari district?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.

SRI M. WILLIAM : May I know whether this will be included in the Third Plan ?

THE HON. SRI P. KAKKAN : It is included in the **Third** Plan.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note*:—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**)

II—GOVERNMENT BILL.

THE MADRAS LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) BILL, 1960 (L.A. BILL NO. 8 OF 1960) AS AMENDED BY THE JOINT SELECT COMMITTEE

Clauses 50 to 53 were put and carried.

Clause 54.

DEPUTY SPEAKER : The question is—

"That Clause 54 do stand part of the Bill".

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment :—

For Clause 54, substitute the following :—

"54. *Government not to take over surplus land in certain cases.*—Where the contract of tenancy provides for the continuance of tenancy in respect of any surplus land, the authorized officer shall not take into account such land for acquisition for public purpose and vest it in the Government."

The amendment was duly seconded.

SRI R. SRINIVASA IYER : Sir, I move the following amendment :—

For sub-clause (2) substitute the following :—

"(2) No compensation shall be payable to an intermediary."

The amendment was duly seconded.

25th September 1961]

DEPUTY SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

Sri N. K. PALANISAMI. : ஸார், ஏற்கெனவே சர்க்கார் 62-வது கிளாஸுக்குத் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாக 3 வருஷத்திற்கு குத்தகைதாரர்களை வெளியேற்றக்கூடாது. இப்போது ஸர்ப்ளஸ் லாண்டிலிருந்து குத்தகைதாரர்களை வெளியேற்றலாம் என்று இருக்கிறது. ஸர்ப்ளஸ் லாண்டை நிலம் இல்லாதவர்களுக்கும், குத்தகை பார்த்துக்கொண்டிருந்தவர்கள் இந்தச் சட்டத்தின் காரணமாக வெளியேற்றப்பட்டவர்கள், கொஞ்ச நிலம் வைத்திருப்பவர்கள் ஆகிய இவர்களுக்குக் கொடுப்பதாக சர்க்காருடைய திட்டம். அப்படி இருக்கும்போது ஸர்ப்ளஸ் லாண்டில் இருக்கும் குத்தகைதாரனை ஏன் வெளியேற்ற வேண்டும் ? இந்த ப்ரொவிஷன் பிரகாரம் அவர்கள் வெளியேற்றப்பட்டால், அவனுக்கு அதே பூமி கிடைப்பதற்கும், மறுபடியும் அந்த பூமியை உழுவதற்கும் சிரமம் இருக்கிறது. அதனால் அவர்களுடைய விவசாயம் கெட்டு விடும். ஏற்கெனவே குத்தகைதாரர்களை வெளியேற்றக் கூடாது என்று ஒப்புக்கொண்டிக்கிறோம். அதிகப்படியாக உள்ள நிலங்களில் குத்தகைதாரர்கள் இருந்தாலும் அவர்களை வெளியேற்றக் கூடாது என்றுதான் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். சர்க்கார் 12-00 noon
இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*Sri R. SRINIVASA IYER : ஸார், எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் அவர்கள் கொடுத்த திருத்தம் அவசியமில்லாத திருத்தம். அதோடில்லாமல் இந்த 54-வது ஷரத்தின் நோக்கத்திற்கே நேர்விரோதமானது. அதோடு இந்த 54-வது கிளாஸையே எடுத்துவிடலாம் என்று அவர் பேசியிருக்கலாம். 54-வது கிளாசிலே 18-வது கிளாஸைக் குறிப்பிட்டு பேசுகிறது. 18-வது கிளாசிலே சர்பிளஸ் லாண்டை ஆதரைஸ்ட் ஆபீசர் அக்வயர் செய்வதற்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அக்வயர் செய்யும் லாண்டு சர்க்காருக்கு வெஸ்டாகிறது. அப்படி வெஸ்டாகக்கூடிய லாண்டிற்கு காம்பன்சேஷன் கொடுப்பதோ, அந்த நிலத்தில் டெனன்ட் யாராவது இருந்தால் ஒரு விவசாய வருஷத்திற்கு மேல் நீடித்திருக்கக் கூடாது என்று சொல்வதற்கோ இந்த ஆதரைஸ்ட் ஆபீஸருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி 30 ஏக்கருக்கு மேல் உள்ள நிலத்தை காம்பன்சேஷன் கொடுத்து அக்வயர் செய்து எடுத்துக்கொள்வதை, நிலமில்லாத விவசாயிகளுக்கு கொடுப்பதற்கு 54-வது பிரிவு இருக்கிறது. ஆனால் கனம் என். கே. பழனிசாமி அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தைப் பார்த்தால், ஒரு குத்தகைதாரன் 30 வருஷம், 20 வருஷம் ஒரு குறிப்பிட்ட நிலத்தை வைத்திருந்தால், அந்த சர்ப்பிளஸ் லாண்டை எடுத்துக்கொள்ளக்கூடாது என்றாகிறது. விவசாயிகளுக்காகவே பாடுபடுகிறவர், இப்படி திருத்தம் கொடுத்திருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது ஒரு குத்தகைதாரனுக்கு 30 அல்லது 29 ஏக்கர் நிலம் இருந்தாலும், அவன் அதை அப்படியே வைத்துக்கொண்டிருக்கலாம். அவன் பாடுபடாமல், விவசாயியை வைத்துக்கொண்டு சாகுபடி செய்யலாம் என்று சொல்லப்படுகிறது. அதாவது அவன் இன்டர்மீடியரியாக இருந்துகொண்டு, சாகுபடி செய்யலாம் என்று இந்த திருத்தத்திலே அர்த்தமாகிறது. அதாவது அவருடைய திருத்தத்திலே ஒரு குத்தகைதாரன் சர்பிளஸ் லாண்ட் இருந்தாலும் நீடித்திருக்கலாம் என்று அர்த்தமாகிறது. அவர் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தை படிக்கிறேன்.

" *Government not to take over surplus land in certain cases* : Where the contract of tenancy provides for the continuance of tenancy in respect of any surplus land, the authorized officer shall not take into account such land for acquisition for public purpose and vest it in the Government."

சர்பிளஸ் லாண்ட் இருக்கக்கூடிய குத்தகைதாரனுக இருந்தால், அவர் ஜாஸ்தியான வருஷங்களுக்கு உரிமையிருந்தால், அவரிடமிருந்து அந்த சர்பிளஸ் லாண்டை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது என்ப தாகும். அதாவது அவரையும் அப்புறப்படுத்தக்கூடாது, சர்க்காருக்கு, வெஸ்டாகக்கூடாது என்பதுதான் அவருடைய திருத்தம். இது சரியா, நோக்கத்திற்கு சரியா, சட்டத்திற்கு சரியா அல்லது அவருடைய நோக்கத் திற்கே சரியா என்று கேட்கிறேன். ஆகவே இந்தத் திருத்தம் அவசியமே இல்லை. மேலும், ஒரு குத்தகைதாரனுக்கு 5 எக்கர் இருக்கலாமா அல்லது 30 எக்கர் வைத்துக்கொள்ளலாமா என்கிற விஷயம் சர்ச்சையில் இருக்கும்போது, 30 எக்கருக்கும் மேற்பட்டு சர்பிளஸ் லாண்டாக அவர் வைத்துக்கொள்ளலாம் என்பது சர்க்காரின் நோக்கத்திற்கே, இந்த மசோதாவினுடைய நோக்கத்திற்கே தவருனது. ஆகவே இந்தத் திருத்தம் சரியல்ல. ஆகவே இந்தத் திருத்தத்தை நான் அடியோடு எதிர்க்கிறேன்.

இரண்டாவதாக, நான் கொடுத்துள்ள திருத்தம் ஒரு சின்ன திருத்தம் தான். 54-வது கிளாசிலே, 2-லே

"The compensation referred to in sub-section (1).........shall be apportioned between the cultivating tenant and the intermediary concerned in the manner specified in Schedule IV."

அதாவது ஒரு மனிதன், 50 எக்கர், 100 எக்கர் குத்தகைக்கு வாங்கி, அதை ஒரு கல்டிவேடிங் டெனன்டிடம் கொடுத்து பயிரிட்டு, தான் ஒரு பிரயாசையும் படாமல் பணம் சம்பாதித்துக்கொள்ள வசதி செய்யப்படுகிறது. அதை அவன் பர்சனல் கல்டிவேஷன் என்று சொல்லிக்கொள்ளும் உரிமை இருக்கலாம். நாம் இந்த இன்டர்மீடியரிகளை ஒழிக்க வேண்டுமென்று சொல்கிறோம். இதிலே ஜமீந்தாரி, இனும்தாரி முறை வேறு. அவர் களுக்கு காம்பென்சேஷன் கொடுத்தோம், காரணம், அவர்களுக்கு அந்த நிலத்திலே ஒனர்ஷிப் இருந்தது. ஆனல் இவர்கள் சும்மா ஒரு அக்ரி மெண்ட் எழுதி வாங்கிக்கொண்டு, இன்னொருவர் அந்த லாண்டின் சொந்தக்காரராக இருக்கும்போது, தாங்கள் லாபமடையக்கூடிய முறையில் இது அமைந்துவிடக்கூடாது என்பதுதான் என்னுடைய திருத்தம். காரணம் அவர்கள் ஒரு பிரயாசையும்படுவதில்லை. சும்மா செல்வாக்கு இருக்கின்ற காரணத்தாலோ அல்லது பணம் இருக்கின்ற காரணத் தாலோ நிலங்களை குத்தகைக்கு வாங்கி விடுகின்றனர். அது தவறு என்கின்ற முறையிலேதான் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இண்டர் மீடியரிக்கு காம்பென்சேஷன் கொடுக்கவேண்டுமென்றுஇருந்தால், அதை சர்க்கார் அபிப்பிராயத்திற்கு விட்டுவிடுகிறேன்.

Sri M. R. KANDASWAMI MUDALIYAR : தலைவர் அவர்களே, இந்த 54-வது கிளாசிலே நண்பர் பழனிசாமி அவர்கள் கொண்டுவந்திருக் கக்கூடிய திருத்தத்தை நான் ஆட்சேபிக்கிறேன். அதன்படி, குத்தகை தாரரிடம் சர்பிளஸாக இருக்கக்கூடிய நிலத்தை நாம் அவர்களிடமிருந்து எடுக்கக்கூடாது என்றுகிறது. அது எனக்கு ஆச்சரியத்தைத்தான் உண் டாக்குகிறது. இதுவரையில் இந்தச் சபையிலே இந்த சரத்துக்களின், பேரிலே, இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் பேரிலே நம்முடைய நண்பர்கள் விட்டக் கண்ணீர், இந்த அசெம்பிளியை அடித்துக்கொண்டு போய்விடுமா என்பதைப் போல் இருந்தது. ஆனல் இன்றைக்கு இந்த நண்பர் பேசுகிற பேச்சைக் கேட்கும்போது, ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. ஏதோ சில குத்தகைதாரர்கள் இவருக்கு வேண்டியவர்களாக இருப்பார் களோ என்றும், அதற்கு இவர் இப்படி பேசக்கூடியதாக இருக்கிறதோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

The Hon. Sri C. SUBRAMANIAM : நோக்கம்பற்றி இந்தச் சபையில் பேசக்கூடாது.

DEPUTY SPEAKER : ஆம், இந்தச் சபையிலே எதுவும் "பர்சன லாகப்" பேசக்கூடாது.

25th September 1961]

Sri M. R. KANDASWAMI MUDALIYAR : அவர் இப்படிச் சொல்வது எனக்கு வியப்பாக இருக்கிறது. சிலர் நிலத்தை மாத்திரம் குத்தகைக்கு வாங்கி விவசாயம் நடத்திக்கொண்டு வருகிருர்கள். சிலர் தங்களிடம் உபரியாக உள்ள நிலத்தை இப்படி குத்தகைதாரருக்குக் குத்தகைக்குக் கொடுத்துவிடுகிருர்கள். ஆனுல் அந்த நிலத்திலே உழைப்பதெல்லாம் வேறு சிலர். இப்போது அந்த நிலத்திலே உழுகின்ற விவசாயிக்கே அந்த நிலம் பயன்படக்கூடிய வகையில் இருக்கவேண்டு மென்பதற்காக நாம் இந்த சபையிலே சட்டம் கொண்டு வந்திருக்கிறேம். ஆகையினுலே, இப்படி சர்பிளஸாக இருக்கும் நிலத்தை நாம் எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர, அவர்களிடமே வைத்துக்கொள்ள விடுவது தவறு. அந்த வகையிலே நண்பருடைய திருத்தம் இருப்பதாலே, நான் அவருடைய திருத்தத்தை எதிர்க்கிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : ஸார், இந்தப் பிரிவு டெனன்டுக்கு காம்பென்சேஷன் கொடுக்கிற விஷயம். இதிலே வந்து கனம் அங்கத்தினர் பழனிசாமி அவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிருர். அவர் கொடுத்திருக்கக்கூடிய திருத்தம் சரியாக இல்லே. சாதாரணமாக, விவசாயிகள் வருஷத்திற்கு வருஷம் சில இடத்திலே நிலத்தை காண்ட் ராக்ட் எடுத்திருப்பார்கள். சில சமயங்களிலே 2, 3 வருஷத்திற்குகூட காண்ட்ராக்ட் எடுத்திருப்பார்கள். அப்படி இருந்தால், அதை அவர்கள் மீற முடியாது. அதற்காக இந்தக் காம்பென்சேஷன் கொடுத்தால் அது பரிகாரமாகிவிடும். அந்த வகையிலேதான் இந்த காம்பென்சேஷன் கொடுப்பது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும், இதிலே உபரியாக இருக்கும் நிலத்தைத்தான் எடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதரைஸ்ட் ஆபீஸர் அப்படிப்பட்ட நிலங்களே எடுப்பார். அதற்கு எவ்வளவு காம்பென்சேஷன் கொடுப்பது என்பதை அவர்தான் தீர்மானம் பண்ண வேண்டும். இது குறிப்பிட்ட ஒரு டெனன்ட் ஒரு காண்ட்ராக்டின் கீழே 2, 3 வருஷம் என்று வந்துவிட்டால்தான் எடுத்துக்கொள்ளப்படுகிறது. மற்றவர்களே இது குறிப்பிடவில்லே. அதிலும், 18 (4)-ஐப் படித்தால், ஆதரைஸ்ட் ஆபீசர்கூட உடனடியாக அந்த டெனன்டை வெளியேற்றக் கூடாது என்றிருக்கிறது. ஒருவர் சர்பிளஸ் லாண்ட் வைத்திருக்கிருரா, இல்லேயா என்பதை அவர் பரிசிலனே செய்யவேண்டும். அப்படி பரிசிலனே செய்து முடிவு செய்தாலும் உடனடியாக அந்த லாண்டை எடுத்துக்கொள்ள முடியாது. டெனன்டே வைத்துக்கொள்ளலாம். ஆதரைஸ்ட் ஆபீசரிடம் குறிப்பிட்ட நிலம் வந்தால்தான், அவர் அந்த நிலத்தை எப்படி எப்படி பங்கிடுவது, யாருக்கு கொடுக்க வேண்டும் என்பதை யோசனே செய்வார். அப்படி இல்லாவிட்டால், இந்த டெனன்ட் என்கிறதற்கு அர்த்தமாகாது. ஐந்து எக்கர்க்கு ஜாஸ்தியாக இருக்கிறவர், அவர்களுடைய பழக்க வழக்கங் கள் முதலியவைகளே கவனிக்காமல் ஆதரைஸ்ட் ஆபீசர் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, இந்தச் சட்டம் சரியான அடிப்படையிலே அமைக்கப் பட்டிருப்பதால், இதற்குத் திருத்தம் தேவையில்லே. 18 (4)-லே இதற்கு வேண்டிய இடமிருக்கிறது. டெனன்டுக்கு அதிலே உரிமையிருக்கிறது. ஆகவே இந்தத் திருத்தத்தை ஒப்புக்கொள்வதற்கு இல்லே.

கனம் ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள் சொன்னுர்கள், இந்த இண்டர் மீடியரி ஆட்கள் எப்படி கல்டிவேடிங் டெனண்டாக ஆகமுடியும். ஒரு கான்ட்ராக்டினுல் இந்த ரிலேஷன்ஷிப் ஏற்படுத்திவிட முடியுமா என்று கேட்டார்கள். இந்த மாதிரிப் பிரச்னே பின்னுல் எழும் என்பதற்காகத்தான் அவர்களுக்கும் ரொம்பக் குறைந்த அளவு காம்பன்சேஷன் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இது இப்படியே இருக்கலாம்.

The amendment of Sri N. K. Palanisami was put and lost.

The amendment of Sri R. Srinivasa Iyer was by leave, withdrawn.

Clause 54 was put and carried.

Clause 55.

DEPUTY SPEAKER : The question is—

"That Clause 55 do stand part of the Bill".

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I move the following amendment—

For clause 55, the following shall be substituted :—

"55. *Mode of payment of compensation.*—The amount of compensation as finally determined under this Act shall within a period of one year from the date of taking over the lands by the authorized officer be paid in cash. For any period by which payment is delayed beyond the above period of one year interest shall be paid at 6 per cent per annum".

The amendment was duly seconded.

SRI R. SRINIVASA IYER : Sir, I move the following amendments :—

For sub-clause (1), *substitute* the following :—

"(1) the amount of compensation as finally determined under this Act shall within six months from the date of such determination be paid to the person found by the authorized officer under sections 50 and 51 to be entitled there to in the following manner :—

(*a*) Wholly in cash if the amount of compensation is less than five thousand rupees;

(*b*) one half in cash and the other half in bonds if the amount of compensation is above five thousand rupees and less than ten thousand rupees; and

(*c*) partly in cash and partly in bonds as the Government may deem fit in other cases".

To sub-clause (2), *add* the following proviso :—

"Provided that where compensation is paid in the shape of bonds the amount shall be payable in annual instalments not exceeding ten commencing from the dates specified above".

After sub-clause (2), *add* the following sub-clauses (3) and (4)—

"(3) Where the compensation is paid by Government as aforesaid, and where the surplus land is disposed of in the manner provided by Chapter XIII, it shall be open to the Government to recover such compensation on such terms, in such manner and with such rate of interest as may be prescribed by rules made in this behalf from the person or persons to whom such land is so assigned.

(4) (*a*) If the land-owner whose land is declared to be surplus land and required for a public purpose under section 18 desires to sell the land to the tenant who is in possession of the land, and who is not in possession of land in excess of his ceiling area, such person shall, within sixty days of the publication of the notification under section 18, give notice in writing of his intention to such tenant and offer to sell the land to him. In case the latter intends to purchase the land, he shall intimate in writing his readiness to do so within thirty days of the receipt of such notice.

(*b*) If there is any dispute about the reasonable price payable for the land either the land owner or the tenant may apply in writing to the authorized officer for determining the reasonable price; and the authorized officer shall after giving an opportunity to the persons concerned for being heard and after making such enquiry as he may deem fit shall fix the reasonable price of the land which shall be the average of the prices obtaining for similar lands in the locality during the five years immediately preceding the date on which the declaration under section 18 is made.

(*c*) The tenant shall deposit with the authorized officer the amount of the price determined as above within such time as may be prescribed.

(*d*) On deposit of the entire amount of the reasonable price, the authorized officer shall issue a certificate in the prescribed form to the tenant declaring him to be the purchaser of the land; the authorized officer shall also direct that the price so deposited shall be paid to the land-owner.

(*e*) If the tenant does not exercise the right of purchase in response to the notice given to him by the land-owner under clause 4 (a) or fails to deposit the amount of price as required by clause 4 (c) such tenant shall forfeit his right of purchase and the land may be disposed off by Government in the manner provided by Chapter XIII without prejudice to any other rights he may be entitled to under this Act.''

The amendments were duly seconded.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, power is given to the Government to pay the amount either in cash or by bond. The Government will have to decide this after the final publication. That means, it will take a very long time and people who have lost their lands will be in a state of suspense and they will not be in a position to get the money quickly. Therefore, my submission is that the moment the lands are taken over, it should be possible for the Government to pay the entire amount of compensation in cash. If however, there was any delay in the payment, interest at the rate of 6 per cent per annum may

be paid in respect of the amount due to the parties. Recently, the Government took over the zamindaris and after determining the compensation, the entire amount due to the zamindars were paid to them. Here also, it should be possible for the Government to pay the entire compensation amount in respect of the surplus lands taken over by the Government.

* **Sri R. SRINIVASA IYER** : இந்த 55-வது கிளாஸ் நஷ்ட ஈடு கொடுக்கிற விதத்தைப் பற்றியது. சர்க்கார் கொடுத்திருக்கிற இந்த மசோதாவிலே ரொக்கமாகவோ அல்லது பாண்டு மூலமாகவோ அல்லது இதில் கொஞ்சம், அதில் கொஞ்சமாகவோ சர்க்கார் அபிப்பிராயப் படி "as the government may deem fit" கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே நான் கொடுத்திருக்கிற திருத்தம் அடியில் கண்ட மாதிரி :—

"For sub-clause (1), substitute the following :—

'(1) the amount of compensation as finally determined under this Act shall within six months from the date of such determination be paid to the person found by authorized officer under sections 50 and 51 to be entitled thereto in the following manner :—

(*a*) Wholly in cash if the amount of compensation is less than five thousand rupees;

(*b*) one half in cash and the other half in bonds if the amount of compensation is above five thousand rupees and less than ten thousand rupees; and

(*e*) partly in cash and partly in bonds as the Government may deem fit in other cases."

என்னுடைய நோக்கம் என்னவென்றால் 30 ஏகராவுக்கு மேலே உள்ள நிலத்தை நிலச்சுவான்தாரிடமிருந்து எடுத்துக்கொள்ளுகிற காலத்தில், அது கொஞ்சத் தொகையாக இருந்தால், எடுத்துக்கொண்ட தேதியிலிருந்து 6 மாதங்களுக்குள்ளாக அவர்களுக்கு காம்பென்சேஷனை ரொக்கமாகக் கொடுத்துவிடவேண்டும் என்பதுதான். ஏனென்றால் அந்தப் பணத்தைக் கொண்டு அவர்கள் வேறு தொழில்களில் ஈடுபடலாம், அல்லது சர்க்கார் தொழில்களில் "ஷேர்ஸ்" எடுத்துக்கொள்ளலாம். அவர்கள் ஏதாவது ஒரு முறையில் இந்த நஷ்ட ஈட்டுத் தொகையை உபயோகப்படுத்துவதற்கு ஒரு வழி உண்டு. சர்க்கார் மசோதாவிலே 'either in cash or in bond' என்று இருக்கிறது. அதிலே ஒரு வரைமுறை செய்திருக்கிறேன். நான் கொடுத்திருக்கிற திருத்தத்தில், ரூ. 5,000-க்கு உள்பட்டு இருந்தால், ரொக்கமாகவும், ரூ. 5,000-க்கு மேல் ரூ. 10,000 வரையிலே பாதி ரொக்கமாகவும், பாதி பாண்டு மூலமாகவும், அதற்கு மேலே போனால் பகுதி பாண்டு மூலமாகவோ அல்லது பகுதி ரொக்கமாகவோ சர்க்கார் அபிப்பிராயப்படி கொடுக்கலாம் என்று நான் சொல்லுகிறேன். ஒருவருடைய உபரி நிலத்தை எடுத்துக்கொள்ளும்பொழுது அவருக்கு கிடைக்கக் கூடிய நஷ்ட ஈட்டைக் கொடுத்தால், அதைக் கொண்டு அவர் ஜீவிக்கக் கூடிய ஒரு வழி ஏற்படவேண்டுமென்பதுதான் என்னுடைய நோக்கம். பூராவும் பாண்டாகக் கொடுத்தால், கொடுக்கிற தொகை வருஷா வருஷம் கொஞ்சம் கொஞ்சமாக செலவழிந்து, மூலதனமே இல்லாமல் போய்விடும். அது தவிர, எஸ்டேட்ஸ் அபாலிஷன் ஆக்ட் பாஸ் செய்யப்பட்டபொழுது 6 மாத கெடுவுக்குள்ளாக சர்க்கார் நஷ்ட ஈட்டை டெபாஸிட் செய்யவேண்

25th September 1961] [Sri R. Srinivasa Iyer]

டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் ரொம்ப காலம் நஷ்ட ஈடு வராமல் கஷ்டம் ஏற்பட்டிருப்பதுபற்றி இந்த மன்றத்தில் பல தடவைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால்தான நஷ்ட ஈட்டை இந்த முறையில் கொடுக்க வேண்டுமென்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

இரண்டாவது உப பிரிவுக்கு நான் கொடுத்திருக்கும் திருத்தம் என்ன வென்றால், இந்த பாண்டு கொடுக்கிற காலத்தில் சர்க்கார் அபிப்பிராயப் படி பாண்டு கொடுக்கலாம் என்று இருக்கிறது, 10 வருஷங்களுக்குள்ளே வருஷாந்திர தவணையாகக் கொடுத்துவிடவேண்டும் என்பதுதான். 20 வருஷங்களோ அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திலோ நஷ்ட ஈடு கிடைக்கக்கூடிய நிலைமை இருந்தால் அதுவரையில் அந்த நிலச்சுவான்தார் இருப்பாரோ என்னவோ அந்தப் பணம் ரொம்பவும் சில்லரையாக செல வழிந்துவிடும். அதனால்தான் நான் **provided that where compensation is paid in the shape of bonds the amount shall be payable in annual instalments not exceeding 10 commencing from the dates specified above** என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். பத்து வருஷத்தில் வருஷாந்திர தவணையாகக் கொடுத்துவிடவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அதற்கு சர்க்கார் "இண்டரெஸ்டு" எல்லாம் "ப்ரொவைட்" பண்ணுவார்கள்.

நான் இன்னொரு முக்கியமான திருத்தம் கொடுத்திருக்கிறேன். பொது விவாதத்தின்போதுகூட நான் இதைப்பற்றி சொல்லியிருக்கிறேன். என்னுடைய திருத்தமானது டெல்லி பார்லிமெண்டில் செய்யப்பட்ட 1960-ம் வருஷத்திய 33-வது ஆக்டை அனுசரித்தது. பார்லிமெண்டில் அந்த மாதிரி சொல்லியிருப்பதினால் அந்தத் திட்டத்தை ஒருக்கால் நம்முடைய மாநிலத்திலேகூட உபயோகப்படுத்தலாமோ என்கிற நோக்கம் தான் எனக்கு. என்னுடைய திருத்தம் :—

"After sub-clause (2), add the following sub-clauses (3) and (4)--

'(3) Where the compensation is paid by Government as aforesaid, and where the surplus land is disposed off in the manner provided by Chapter XIII, it shall be open to the Government to recover such compensation on such terms, in such manner and with such rate of interest as may be prescribed by rules made in this behalf from the person or persons to whom such land is so assigned'."

நிலத்தை எடுத்து இன்னொருவருக்குக் கொடுக்கிறோம். பொது மக்களுடைய பணத்திலிருந்து "ஜெனரல் கன்சாலிடேடட் பண்டு ஆப் தி ஸ்டேட்" லிருந்து நிலச்சுவான்தாருக்கு நஷ்ட ஈட்டைக் கொடுத்துவிட்டு, வேறு ஒருவருக்கு "லாண்டுலெஸ் லேபர்" அல்லது வேறு யார் வேண்டுமானாலும் இருக்கலாம். அந்த நிலத்தைக் கொடுக்கும்பொழுது, பொதுப் பணத்திலிருந்து எடுத்துக்கொடுத்த நஷ்ட ஈட்டை திருப்பி வசூல் பண்ணுவதற்கு உள்ள வழியை நான் சொல்லியிருக்கிறேன். "பார் ரெண்டு" கொடுப்பதுபோல "ஈஸியாக" 20 தவணையிலே நிலத்திலே உழுகிற குடியானவனிடமிருந்து அந்தக் காம்பென்ஸேஷனை வசூலித்துவிடலாம். அப்படியில்லாமல் போனால் அந்தக் குடியானவனுக்கு அந்த நிலத்திலே உரிமை இல்லாமல் போய்விடும் சர்க்கார் நிலச்சுவான்தார் ஆகிவிடுவார்கள். அவன் சர்க்காரிடம் டெனன்டாக இருப்பான். டெனண்டு சர்க்காருக்கு **fair rent** கொடுக்கக்கூடிய நிலைமையில் இருக்கும். சர்க்கார் கொடுத்த காம்பென்ஸேஷன் தொகையை ஈஸியாக 20 வருஷ தவணையில் சர்க்காருக்கு டெனண்டு செலுத்திவிட்டால், அந்தக் குடியானவன் "ஓனர்" ஆகிவிடலாம். டெல்லி பார்லிமெண்டில் பாஸ் செய்யப்பட்ட மணிப்பூர் ஆக்டில் அப்படி இருக்கிறது.

சப்-கிளாஸ் 4 (எ)-யில் என்ன சொல்லியிருக்கிறேன் என்றால் " **If the land-owner whose land is declared to be surplus land and required for a public purpose under section 18 desires to sell the land etc.** அதாவது உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று சொல்லுகிற முறையில், நிலத்தை உழுதுகொண்டிருப்பவனுக்கு உபரி நிலத்தை சொந்தக்காரர் விற்க விரும்பினால் குடியானவன் அதை வாங்கிக்கொள்ளலாம். அதற்கு காம்பன்ஸேஷன் மார்கெட் " வால்யூ " படி கொடுக்கப்போவதில்லை. ஏதோ ஒரு தொகையை அவன் 20 வருஷங்களுக்குள் கொடுத்துவிட்டால் அவனை ஓனராகப் பண்ணிவிடலாம். உபரி நிலம் ஒரு குடியானவன் ஸ்வாதீனத்தில் இருந்தால், அதை இஷ்டப்பட்டால் அவன் வாங்குவதற்கு உரிமை கொடுக்கவேண்டும். இருபது வருஷத்தில் நஷ்ட ஈட்டை குடியானவர்களிடத்திலிருந்து வசூல் பண்ணுவதற்கு இது ஒரு குறுக்குவழி. மணிப்பூர் ஆக்டில் (பார்லிமெண்டில் செய்யப்பட்டது) அதில் 130, 131, 132-வது செக்ஷனில் இந்த மாதிரி ப்ரொவிஷன் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட டையத்துக்குள்ளே குடியானவன் அந்த நிலச்சுவான்தாரிடமிருந்து அந்த நிலத்தை கிரயத்துக்கு வாங்கிவிடலாம். அந்தக் கிரயம் கூட குறைவு. ஜாஸ்தி என்று சொன்னால், அந்தக் கிரயத்தை நிர்ணயிப்பதற்கு " ஆதரைஸ்டு ஆபீஸருக்கு " பவர் இருக்கிறது. ஐந்து வருஷ " ஆவரேஜ் " விலையை வைத்துக்கொள்ளலாம். " ஹிடி டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்டில் " கூட ஒருவர் நிலத்தில் மற்றொருவர் வீடு கட்டிக்கொண்டு குடியிருந்தால், குடியிருந்தவர் அந்த நிலத்தை கிரயத்திற்கு வாங்கிக்கொள்ளலாம் என்று போட்டிருக்கிறது. " ஆவரேஜ் ஆப் பைவ் ஈயர்ஸ் ப்ரைஸ் " என்று தான் போடப்பட்டிருக்கிறது. அதுவும் எது குறைவாக இருக்கிறதோ அந்தத் தொகை என்று போடப்பட்டிருக்கிறது. அம்மாதிரிதான் சுவாதீனத்திலுள்ள குடியானவன் நிலத்தை கிரயத்திற்கு வாங்கிக்கொள்ளக்கூடிய வழி வகை செய்யும் முறையில் தான் என்னுடைய திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

(4) (*a*) If the land-owner whose land is declared to be surplus land and required for a public purpose under section **18 desires to sell** the land to the tenant who is in posesssion **of the** land, and who is not in possession of land in excess of his ceiling area, such person shall, within sixty days of the publication of the notification under section 18, give notice in writing of his intention to such tenant and offer to sell the land to him. In case the latter intends to purchase the land, he shall intimate in writing his readiness to do so within thirty days of the receipt of such notice.

(*b*) If there is any dispute about the reasonable price payable for the land either the land owner or the tenant may apply in writing to the authorized officer for determining the reasonable price; and the authorized officer shall after giving an opportunity to the persons concerned for being heard and after making such enquiry as he may deem fit shall fix the reasonable price of the land which shall be the average of the prices obtaining for similar lands in the locality during the five years immediately preceding the date on which the declaration under section **18 is made.**

(*c*) The tenant shall deposit with the **authorized officer** the amount of the price determined as above **within such time as may be prescribed.**

25th September 1961] [Sri R. Srinivasa Iyer]

(*d*) On deposit of the entire amount of the reasonable price, the authorized officer shall issue a certificate in the prescribed form to the tenant declaring him to be the purchaser of the land; the authorized officer shall also direct that the price so deposited shall be paid to the land-owner.

(*e*) If the tenant does not exercise the right of purchase in response to the notice given to him by the land-owner under clause 4 (*a*) or fails to deposit the amount of price as required by clause 4 (*c*) such tenant shall forfeit his right of purchase and the land may be disposed of by Government in the manner provided by Chapter XIII without prejudice to any other rights he may be entitled to under this Act."

இதுதான் என்னுடைய திருத்தம். உழுகின்ற குடியானவன் வாங்க வழி செய்வது ஒரு முறை. அப்படி அவன் வாங்காவிட்டால், சர்க்கார் அந்த நிலத்தை வேறு யாருக்கும் கொடுப்பதை இது பாதிக்காது. இது மணிப்பூர் ஆக்டில் இருப்பதை அப்படியே காபி செய்யப்பட்டிருக்கிறது. இதை இன்னும் சில ஸ்டேட்டுகளிலும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, குறிப்பிட்ட தேதியில் சர்ப்ளஸ் லாண்டு எடுக்கும் போது, இருக்கிறவனே வாங்க அவனுக்கும் ஒரு உரிமை வேண்டும். அதுதான் நோக்கம் நான் திருத்தம் கொடுத்திருப்பதற்கு. அது நியாயமானது என்று நினைக்கிறேன்.

SRI A. GOVINDASAMY : ஸார், மிராசுதார்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும் இந்த 55-வது பிரிவுக்கு திருத்தம் கனம் ராமசாமி முதலியார் அவர்களும், கனம் ஸ்ரீனிவாச அய்யர் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருத்தங்களை எதிர்த்து நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த மசோதாவில், இந்த ஷரத்துத் தெளிவாக இல்லாததால், ஷரத்தில் பணமாகவோ அல்லது பாண்டாகவோ அல்லது கொஞ்சம் பணமாகவும் கொஞ்சம் பாண்டாகவும் என்று சொல்லப்பட்டிருக்கும் கருத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு, இதில் ஒரு திட்டவட்டமான முடிவு இல்லாததால், பணமாகத்தான் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை இங்கே எதிர்க்கட்சித் தலைவர் கனம் ராமசாமி முதலியார் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் ; ஒரு ஆண்டு காலத்தில் கொடுக்கவேண்டுமென்று திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதைவிட மிக்க முற்போக்காக ஆறு மாதத்தில் கொடுக்கவேண்டும் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்த கனம் ஸ்ரீனிவாச அய்யர் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். இதையெல்லாம் கூர்ந்து பார்க்கும்போது, அரசாங்கம் திட்டவட்டமாக இவ்வளவு காலத்தில் என்று போடாததால், ஒரு ஆண்டில் கொடுக்க வேண்டும், ஆறு மாதத்தில் கொடுக்க வேண்டும் என்று ஏதோ நிலச் சொந்தக்காரர்கள் பணம் இல்லாமல் கஷ்டப்படுவது போல நினைத்துத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

பாண்டாகக் கொடுத்தாலும், வட்டி எவ்வளவு என்று குறிப்பிட்டுச் சொல்லாததால், 6 சத விகிதம் வட்டி கொடுக்க வேண்டும் என்ற எதிர்க்கட்சித் தலைவர் கனம் ராமசாமி முதலியார் தங்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். என்னைப் பொருத்த வரையில், பணமாகக் கொடுக்காமல், பாண்டாகவே கொடுத்து, பதினைந்து வருஷக் கெடுவில் கொடுக்கப்படும் என்று சொல்லி, அதற்கு $4\frac{1}{2}$ பர்செண்ட் வட்டிதான் என்றும் தீர்மானிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அப்படிக் கொடுப்பதனால், நிலத்தை சர்க்காருக்குக் கொடுக்கும் மிராசுதார்களுக்கு பாதகம் எதுவும் ஏற்படாது. இப்பொழுதே நஷ்ட ஈடு உடனடியாக கொடுப்பதானால், ஆறு பர்செண்ட் வட்டியும் கொடுப்பதானால் அதனால் சர்க்காரின் வருவாய் பாதிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

Sri N. K. PALANISAMI : ஸார் முதலிலே எடுத்துக் கொள்ளப் படும் பூமிக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமா அல்லது கொடுக்க வேண்டாமா என்பது பிரசனை. கான்ஸ்டிட்யூஷன் பிரகாரம் அவசியம் நஷ்ட ஈடு கொடுக்கத்தான் வேண்டும் என்றால், ஏற்கனவே பல சலுகை கள் நிலச் சொந்தக்காரர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன ; அவற்றையும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். முதலில் நிலமாக அவர்கள் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னாலும், இன்னும் ஸ்ரீதனம், நிலம், தோப்புகள், மேய்ச்சல் நிலங்கள் போன்ற வகைகளில் பல நிலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அப்படிப் பல விதமான வருமானம் உள்ள பூமிகளை அவர்களே வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது, இந்த மசோதா வின் பிரகாரம் மீதி சர்க்கார் எடுத்துக்கொள்ளப்போகும் நிலம் பிரயோ ஜனம் இல்லாத பூமியாக இரண்டு லட்சம் ஏக்கராக்கள் வரப்போகிறது. ஆகவே, ஏற்கனவே எவ்வளவோ வருமானம் வந்திருக்கிறது. இப்பொ ழுது நஷ்ட ஈடு உடனடியாகக் கொடுக்க வேண்டிய அவசரம் இல்லை. அது வும் பணமாகக் கொடுக்க வேண்டாம். பணத்தைக்கொண்டு சர்க்கார் எவ்வளவோ காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. நூற்றுக் கணக்கான திட்டங்கள் எடுக்கப் போகிறோம். ஆகவே, இவர்களுக்கு உடனடியாக நஷ்ட ஈடு பண ரூபமாகக் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. அப்படிப் பணமாகத்தான் வேண்டுமென்றால், அதை 20 வருஷ காலத்தில் கொடுக்கலாம். ஆகவே, சர்க்கார் கொண்டுவந்திருக்கும் மசோதாவில் உள்ள கிளாஸை ஆதரிக்கிறேன் ; கனம் ஸ்ரீனிவாச அய்யர் திருத்தத்தை எதிர்க்கிறேன்.

Sri M. P. SUBRAMANIAM : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 55-வது பிரிவில் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றி விளக்கம் கூறப்பட்டிருக்கிறது. இதிலே, நஷ்ட ஈடு பண மாகவோ அல்லது பாண்டாகவோ, அல்லது பணம் கொஞ்சம், பாண்டு கொஞ்சமாகவோ ஆக இரண்டும் சேர்ந்தோ கொடுக்கலாம் என்றிருக் கிறது. பணம் கொடுப்பதானால், யாரிடத்தில் அரசாங்கம் போய்ப் பணம் கேட்கப் போகிறார்கள். பொது கஜானாவிலிருந்துதான் கொடுக்கவேண்டும். அது பற்றிக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் எல்லாம் பலவிதமான சிக்கல்களைத்தான் உண்டாக்கும். அதோடுகூட, குடியானவர்களுக்கும் பாதகத்தை விளைவிக்கும். கனம் ஸ்ரீனிவாச அய்யர் சொல்வது, நிலச் சொந்தக்காரர் நிலத்தை எடுக்கும்போது, அங்கே உழும் குடியானவனே நேரிடையாக வாங்கிக்கொள்ள சம்மதப்பட்டால், அதற்கான வழி வகை களைச் செய்ய வேண்டும் என்கிறார்கள். அது என்ன விலை என்பதை யெல்லாம், அந்த ஆதரைஸ்டு ஆபீசரே அதையெல்லாம் நிர்ணயிக்கலாம் என்கிறார்கள். அது எவ்வளவாக இருக்கும் என்று தெரியவில்லை (ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யர் : ஆவரேஜ் ஆப் பைவ் இயர்ஸ்) சரி, கடந்த ஐந்து வருஷ காலத்தில் என்ன விலையோ அதன் சராசரியை நிர்ணயிக்கவேண்டும் என் கிறார்கள். ஏற்கனவேயே இந்த மசோதாவில் நாம் கொள்கையளவில் ஒத்துக் கொண்டிருக்கிறோம் நஷ்ட ஈடு 9 முதல் 12 மடங்கு வரையுள்ள அளவாக இருக்கவேண்டும் என்று. ஆகவே, அதைத் திருத்துவது என் றால் அது பாதகமாகத்தான் இருக்கும். ஒரு குத்தகைகாரன் நேரிடை யாக நிலச்சுவாந்தாரிடம் வாங்குவது என்று அமைத்தால், அதனால் பல இன்னல்கள், சிக்கல்கள் ஏற்படும் ; குடியானவர்களுக்குப் பாதகமான சூழ்நிலைதான் ஏற்படும். பொதுவாக நஷ்ட ஈடே கொடுக்கவேண்டாம் என்ற கருத்தைச் சொல்லியிருந்தால் நலமாக இருக்கும். ஆனால், அரசியல் சட்டத்தில், இந்த அரசாங்கத்தில் அந்தக் கொள்கையை ஒத்துக்கொள்ள வில்லை ; ஆகவே நான் அதை வற்புறுத்தவில்லை. ஆனால், கொடுக்கக் கூடிய நஷ்ட ஈடு குறைந்த அளவில் இருக்க வேண்டும். ஏனென்றால், குத்தகைக்காரர்கள் என்றாலும், அந்த நிலத்தோடு அவர்கள் வாழ்க்கை யும் பின்னிப் பிணைந்திருக்கிறது. சாதாரணமாக நஷ்ட ஈட்டை 9—12 பங்குக்கும் குறைவாகவே இருக்கவேண்டும். சிறிய தொகையாக இருந் தால் அதைப் பணமாகக் கொடுப்பதில் தவறு எதுவும் இல்லை. அந்த

நிலத்தைக் கொடுப்பவர்கள் வேறு தொழில்கள் நடத்த அனுகூலமாக இருக்கும். ஆனால் பெரும் தொகையைப் பாண்டுகளாகப் கொடுப்பது தான் நல்லது ; பணத்தை பலவேறு திட்டங்களுக்கும் உபயோகிக்கலாம். அதே நேரத்தில் வட்டி எவ்வளவு என்று நிர்ணயிப்பதும் சரியானதே, என்பதைச் சுட்டிக்காட்டிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

SRI G. ANNAMALAI MUTHURAJA : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு ஆர். ஸ்ரீனிவாச அய்யர் அவர்களுடைய திருத்தத்தை அனுசரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். உபரி நிலத்தை சர்க்கார் எடுத்துக்கொள்ளும் போது, அதற்கு நஷ்ட ஈடு கொடுக்கும் அளவை பின்னால் விதிகள் தயாரிக்கும்போதுதான் நிர்ணயிக்கப்போவதாகத் தெரிகிறது. சர்க்காருக்குத் தற்போது பல காரியங்களுக்கு நிலம் தேவைப்படும்போது, ஒரு விலையைக் கொடுத்துவிட்டு எடுத்துக்கொள்கிறார்கள். ஒரே பட்டா உள்ள பத்து ஏக்கர் நிலம் இருக்கிறது. அதில் ஒரு பகுதி நிலத்தை சர்க்கார் 'கோடௌன்' கட்டுவதற்காகவேண்டி 'அக்வையர்' பண்ணியிருக்கிறார்கள். அம்மாதிரி 'அக்வையர்' பண்ணும்போது, ஒரு செண்ட்டுக்கு 50 ரூபாய் வீதம் சில இடங்களில் விலை போட்டிருக்கிறார்கள். பத்து ஏக்கருக்குள்ளே இன்னொரு இடத்தில் செண்ட் 150 ரூபாய் வீதம் விலை போட்டிருக்கிறார்கள். பக்கத்துப் பக்கத்தில் இருக்கும் நிலம்தான். ஒரே வெள்ளாமை செய்யப்பட்ட நிலம் தான். இருந்தாலும், இப்படி ஒன்றுக்கொன்று வித்தியாசமான விலை நிர்ணயித்திருக்கிறார்கள். இந்த முறையில் உபரி நிலங்களையும் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதற்காகத்தான் அதைக் குறிப்பிடுகிறேன். இதிலே ஒரு சீரான விலை நிர்ணயிக்கப்படவேண்டும். 12-30 p.m.

அக்கம் பக்கத்தில் உள்ள நிலங்கள் எந்த விலைக்குக் கிரயம் செய்யப் பட்டிருக்கின்றன என்பதைக் கணக்கிடுவதற்கு ஏழு வருஷ விலையைப் பார்த்து, அதில் மிகவும் குறைச்சலான விலையைத்தான் உபரி நிலத்திற்கு நஷ்ட ஈடாகக் கொடுக்கவேண்டுமென்று இந்தச் சட்டத்தில் ஏற்படுத்துகிறோம். இரண்டு வருஷங்களுக்கு முன்னால் சில நிலங்களைச் சர்க்கார் கிரயம் வாங்கியிருக்கிறார்கள். எதற்காக ? விவசாயிகளுக்கு கோடௌன் கட்டவேண்டுமென்ற நோக்கத்திலே அம்மாதிரி நிலம் கிரயம் வாங்கியிருக்கிறார்கள். அதே நிலத்திற்குப் பக்கத்தில் பத்து ஏக்கர் தூரத்தில், ஒரு இடத்திற்கு செண்ட் ஒன்று ரூ. 150 வீதம் விலை கொடுத்து வாங்குகிறார்கள். அதற்கும் பக்கத்தில் இன்னொரு இடத்தில் செண்ட் ஒன்று ரூ. 55 வீதம் கொடுத்து வாங்குகிறார்கள். அதற்கு அடுத்து ஒரு செண்ட் ரூ. 500 வீதமும் வாங்கியிருக்கிறார்கள். பத்து ஏக்கர் தூரத்தில் மூன்று விதமான விலை கொடுத்திருக்கிறார்கள் என்றால், உபரி நிலங்களுக்கு எந்த விதமான விலை நிர்ணயம் செய்ய முடியும்? விலை நிர்ணயம் செய்வதற்காகக் கமிட்டி நியமிக்கும்போது, அதிலே விவசாயம் பற்றிய நல்ல அனுபவம் உள்ளவர்களை நியமித்து, எடுத்துக்கொள்ளப்படும் உபரி நிலங்களுக்கு சீரான, நல்ல கிரயம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரிவிலே 'காம்பென்சேஷன்' கொடுக்கிற விஷயம் பொதுவாக இருக்கிறது. கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், அதைப் பணமாகக் கொடுக்கவேண்டும், அதையும் ஒரு வருஷத்திலே கொடுக்கவேண்டும் என்று சொல்கிறார். கனம் அங்கத்தினர் திரு. ஸ்ரீனிவாச அய்யர் அவர்களும் திருத்தம் கொடுத்திருக்கிறார். உடனடியாகப் பணமாகவே கொடுக்கவேண்டும் என்கிறார். உபரி நிலம் எவ்வளவு வரும் என்று இப்பொழுதே தெரியாது. உபரி நிலம் எவ்வளவு கிடைக்கிறது என்பதை வைத்துத்தான் 'காம்பென்சேஷன்' கொடுப்பதை நிர்ணயிக்கவேண்டும். எத்தனை லட்சம் ஏக்கர், எத்தனை கோடி ஏக்கர் உபரி நிலமாகக் கிடைக்கும் என்று ஒரு விஷயமும் தெரியவில்லை. அப்படித் தெரியாமலிருக்கும்போது, என்ன முறையில் கொடுக்க வேண்டும் என்பதே

இப்பொழுதே நிர்ணயித்துவிட்டு, பின்னர் கொடுக்க முடியாத நிலைமை வந்தால் எப்படிச் சமாளிப்பது ? ஆகையால்தான் இதை வைத்திருக்கிறோம்—ஏதோ பிற்பாடு எப்படி எப்படிச் செய்ய முடியுமோ அப்படிச் செய்யலாம் என்று. பணம் கொடுக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். சிறிய தொகையாக இருந்தால் பணம் கொடுக்கவேண்டும் என்பதுதான் நோக்கம். என்றாலும், சூழ்நிலை, நிலைமை ஒன்றும் தெரியாமல் இப்படிப் போடுவதற்கில்லை. ஏனென்றால், விதிகள் போடும்போது எவ்வளவு நிலம் கிடைக்கும் என்பது பற்றி ஒருவிதமான **(rough idea)** இருக்கும். அப்பொழுது அதைச் செய்துகொள்ளலாம் என்ற எண்ணத்தில்தான் பொதுவாக, "**either in cash or in bonds or partly in cash and partly in bonds as the Government may deem fit**" என்று குறிப்பிட்டிருக்கிறோம். சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி செய்வதற்குத் தான் இப்படிப் போடப்பட்டிருக்கிறது. உடனடியாகப் பணம் கொடுப்பது என்றால் அது பொருந்தாது.

கனம் அங்கத்தினர் திரு. ஸ்ரீனிவாச அய்யர், தம்முடைய திருத்தத்தில் "ஐயாயிரம் ரூபாய் வரையில் பணமாகக் கொடுத்துவிட வேண்டும்" என்று ஒரு 'லிமிட்' வைத்திருக்கிறார். கனம் எதிர்க் கட்சித் தலைவர் திரு வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் அப்படி 'லிமிட்' வைக்கவில்லை. உபரி நிலம் என்று ஏற்பட்ட பின், எத்தனை தவணைகளில் நஷ்ட ஈட்டை வாங்கிக்கொண்டிருப்பது ? உடனடியாகக் கொடுத்துவிடலாமே என்கிறார். சீலிங் ஏரியாவுக்கு அதிகமாக நிலம் வைத்துக்கொள்ளாத 'டெனன்ட்' டுக்கு உபரி நிலத்தை தனிப்பட்ட நபர், நிபந்தனை இல்லாமல் கூட விற்றுவிடலாம் என்ற முறையில் கனம் திரு. ஸ்ரீனிவாச அய்யர் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார். இதிலே என்ன தொந்தரவு என்றால், 'ஆதரைஸ்டு ஆபீசர்' ருக்குத்தான புள்ளி விவரம் எல்லாம் தெரியும். தனிப்பட்ட நபர் விவசாயிக்குக் கொடுத்துவிடுவது என்றால், தவறுதலாகக் கொடுக்க நேரிடலாம். பின்னால் 'செக்' பண்ணுவது யார் ? ஐந்து ஏக்கருக்குள்ளேதான் கொடுத்திருக்கிறாரா இல்லையா என்று 'செக்' பண்ண ஒரு வித மெஷினரி இல்லாமல் போய்விடும். 'செக்' பண்ணுவது கஷ்டம். 'ஆதரைஸ்டு ஆபீசர்' என்றால் எவ்வளவு உபரி நிலம் இருக்கிறது என்று அவருக்குத் தெரியும். கல்டிவேடிங் டெனன்ட் எவ்வளவு வைத்துக்கொண்டிருக்கிறார் என்ற எல்லா புள்ளி விவரம் ஜாப்தா இருக்கிறது. 'இன்டிவிட்யூவல்' ஆக இருக்கும் நிலச்சுவான்தார் எப்படிக் கண்காணிக்க முடியும் ? தொந்தரவு எல்லாம் இருக்கிறது ஆகவே, அந்த திருத்தத்தை ஒத்துக்கொள்வதற்கில்லை. விதிகளிலே வேண்டியதைச் செய்து கொள்வதற்கு 'ஸ்கோப்' இருக்கிறது. அதைச் செய்துகொள்ளலாம்.

கனம் அங்கத்தினர் திரு. அண்ணாமலை முத்துராஜா அவர்கள், "வெவ்வேறு இடத்திலே வெவ்வேறு விலை இருக்கிறது. அதையெல்லாம் யார் பார்த்துக் கண்காணிப்பது ?" என்று கேட்டார். அதற்காகத்தான் விதிகளிலே எப்படி எப்படி அமைக்கலாமோ அப்படிச் செய்யலாம் என்று வைத்திருக்கிறோம். கூடுமான வரையில் அதிக வித்தியாசம் ஏற்படாமல் எந்த எந்த முறையில் இதை நாம் அமைக்க முடியுமோ அந்த முறையில் அமைப்பதற்காகத்தான் விதிகளிலே செய்துகொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். ஆகவே, இந்த ஷரத்து அப்படியே இருப்பதுதான் நல்லது. இதில் கைவைத்து ஏதாவது செய்தால் பல தொந்தரவுக்கும் சிக்கலுக்கும் இடம் கொடுக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். நான் இந்த திருத்தங்களை எதிர்க்கிறேன்.

The amendment of Sri V. K. Ramaswamy Mudaliyar **was put and lost.**

The amendments of Sri R. Srinivasa Iyer **were, by leave, withdrawn.**

Clause 55 was put and carried.

Clauses 56 to 58 were put and carried.

25th September 1961]

CHAPTER VIII.

Clause 59.

DEPUTY SPEAKER : The question is—

' That clause 59 do stand part of the Bill.'

* SRI V. K. RAMASWAMY MUDALIAR : Mr. Deputy Speaker, Sir, the Select Committee had gone into Chapter VIII in detail and it is an important Chapter. Now I find that the Government have circulated some amendments. Many of us have returned to Madras only this morning. It looks that the policy enunciated in the Chapter has been changed and in fact the entire Chapter has been changed. Therefore, I request that at least a couple of days' time may be given for the consideration of this Chapter. In the meantime we can proceed with other Chapters. Chapter VIII can be taken up after two days.

THE HON SRI M. A. MANICKAVELU : Sir, I will move the amendment now and discussion on the clause may be taken up tomorrow.

DEPUTY SPEAKER : The Hon. Minister need not move it now. Now we will take up Chapter IX. Clauses 59 to 69 in Chapter VIII will be taken up after two days.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

' Consideration of Chapter VIII (Clauses 59 to 69) be postponed and Chapter IX be taken up for consideration.'

The motion was put and carried.

CHAPTER IX.

Clause 70.

DEPUTY SPEAKER : The question is—

' That Clause 70 do stand part of the bill.'

The amendment given notice of by the hon. Member, Sri M. P. Subramaniam, is a negative one and I rule it out of order.

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment :—

' In clause 70, delete items (i) and (ii) (*a*) and (*b*). '

SRI N. MARUDACHALAM : Sir, I second the amendment.

SRI R. SRINIVASA IYER : Sir, I move the following amendment :—

' In item (ii) (*a*), after the word " public nature ", add the words " for the use or maintenance of hospitals or sanatoria ".'

The amendment was duly seconded.

SRI N. MARUDACHALAM : Sir, I move the following amendments :—

In Clause 70, omit item (ii) (*b*).

In Clause 70, omit item (iv).

In Clause 70, omit item (v).

In Clause 70, omit items (xii) and (xiii).

In Clause 70, insert the following note to item (ix) :—

" Note.—Gramdan land and land donated for purposes of Bhoodan Yagna should be cultivated on a co-operative basis; the income derived therefrom should be utilised for the welfare of the village or be divided among the landless."

In Clause 70, omit items (xii) and (xiii).

The amendments were duly seconded.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I move the following amendments :

For item (viii) substitute the following :—

' (viii) any land used exclusively for growing fuel trees on the date of the commencement of this Act and any other land normally used exclusively for growing fuel trees;

Provided that such land shall be exempt only so long as such land is not used for any other purpose."

After item (xiii) *add* the following as item (xiv).

" (xiv) Land comprised in an efficiently managed farm."

The amendments were duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendments :—

" In Clause 70, delete item (vii) "

" In Clause 70, omit item (x) "

" In Clause 70, omit item (xiii) "

The amendments were duly seconded.

SRI K. G. PALANISWAMY GOUNDER : Sir, I move the following amendment :—

In item (vii) *omit* the words " on or before the first day of July 1959 ".

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment :—

At the end of clause 70, add the following Note :—

" Note 1.—The net annual income from the lands to be retained under this section in respect of religious trusts, orchards, topes, arecanut gardens, lands used exclusively for growing fuel trees, dairy farms or pasture lands should not exceed four thousand eight hundred."

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER: The clause and the amendments are before the House for discussion.

SRI N. K. PALANISAMI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தோப்பு, பழத்தோட்டம் முதலியவற்றிற்கு நாம் ஏற்கனவே அவை இருந்தால் அப்படியே அனுமதி கொடுப்பது—விதி விலக்கு கொடுப்பது என்பது கூடாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்காகத்தான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதுவும்கூட 30 ஸ்டாண்டர்டு ஏக்கர், வருஷம் ஐயாயிரத்து எண்ணூறு ரூபாய் வருமானம் என்ற அடிப்படையில்தான் வைத்துக்கொள்ளலாம். அதற்கு மேல் வைத்துக் கொள்ளக்கூடாது என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன். இந்த டிரஸ்டுகள் சம்பந்தப்பட்ட வரையிலும் தனிப்பட்ட முறையில் மசோதா கொண்டு வரப்போவதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுவும் ஏதோ ஒரு 100 ரூபாய்க்கு சாமிக்கு அபிஷேகம் செய்கிறேன் என்று செய்து விட்டு பாக்கியை அந்தக் குடும்பத்தாரே அனுபவித்துக்கொள்ளும் நிலைமை தான் இப்போது அநேக இடங்களில் இருக்கிறது. அதையும் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இன்று ஆர்சர்டு போன்றவைகளுக்கு பூமி ஒதுக்கக் கூடாது என்று ஏன் சொல்லுகிறேன் என்றால் அதில் நிறைய வருமானம் வருகிறது. அதிலும்கூட நெட் இன்கம், 1,200 க்ராஸ் இன்கம் 1,600 ஆக இந்த அடிப்படையில் வைத்துக்கொள்ளலாம். மற்றவற்றை சர்க்காரே எடுத்துக்கொள்ளவேண்டுமென்பது என் திருத்தம். இதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI N. MARUDACHALAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே விதி விலக்கு என்ற முறையில் தோப்புகளுக்கு விதிவிலக்கு செய்யப்பட்டிருக்கிறது. தோப்பானது இன்றைக்கு மேட்டுப் பாளையத்தில் 40 ஏக்கர தோப்புகூட இருக்கிறது. அந்த 40 ஏக்கர் தோப்பில் $2\frac{1}{2}$ லட்சம் வருமானம் வருகிறது. இப்படி தோப்புக்கு விதி விலக்கு என்று விடுவதைக் காட்டிலும் இதிலும்கூட 1,200 ரூபாய் வருமானம் என்ற அடிப்படையில் தான் வரம்பு கட்டவேண்டும். அப்படியின்றி தோப்பு என்ற பெயரால் தென்னை, வாழை, காப்பி, தேயிலை என்று இப்படி விலக்கிக்கொண்டே போனால் மிச்ச நிலம் கிடைக்காத நிலைமைதான் ஏற்படும். ஆகவே தோப்புகளுக்கும் விதிவிலக்குக் கூடாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. P. SUBRAMANIAM: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப்பகுதியில் விதிவிலக்கு என்ற பெயரால் நீண்ட பட்டியல்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவேயுள்ள மசோதாவில் இந்தப் பட்டியல் இவ்வளவு விரிவாக இல்லை. இதில் மிக விரிவாகப் போய்விட்டது. நான் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொள்வது எல்லாம் விதிவிலக்கு எந்த அடிப்படையில் தரப்படுகிறது என்பதை சரியான முறையில் விளக்கவேண்டும் என்பதுதான். விதிவிலக்குக் கொடுக்காமல் இருப்பதனால் என்ன கஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று கேட்கிறேன். இந்தப் பகுதியில் கல்வி ஸ்தாபனங்கள், மற்ற தர்ம ஸ்தாபனங்கள் இவற்றுக்கு எல்லாம் முழுக்க விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிலத்திற்கு உச்ச வரம்பு விதிப்பது நம் கொள்கையா அல்லது இன்ன இன்ன காரியங்களுக்காக நிலத்தை ஒதுக்கித் தரவேண்டும் என்று வகை செய்வது நம் கொள்கையா என்பதே இதைப் பார்க்கிற போது புரியவில்லை. தனிப்பட்டவகையில் எந்தக் காரணத்தைக்கொண்டும் விதிவிலக்குக்கு அவசியம் இல்லை. இந்தப் பகுதியையே நீக்கிவிடலாம் என்று தோன்றுகிறது. மேலும் இந்த மசோதா வருவதற்கு முன் காப்பி, ரப்பர், தேயிலை, பழம் முதலிய தோட்டங்கள் இருந்தால் அவற்றுக்கு இந்த மசோதாவில் விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதா வந்த பிறகு காப்பி, ரப்பர், தேயிலை, பழம் முதலியவை போட நிலம் வேண்டுமென்றால் அதற்கு இடம் கிடையாது.

உபயோகப்படுத்தினால் போதும். வருமானத்தைத்தான் முக்கியமாக கருத வேண்டும். கல்வி ஸ்தாபனங்களுக்கு என்று நிலத்தைக் கொடுத்துவிட்டு அதை பராமரிக்கும் பொறுப்பை, அந்த நிலத்தை யார் எழுதி வைத்தார்களோ அவர்களே அந்த நிலத்தை பராமரிக்கும் நிலை இருப்பதால் அந் நிலங்கள் அவர்களின் சொந்த நலனுக்காகத்தான் பயன்படுமே தவிர உண்மையான விவசாயிகளுக்கு நல்லது செய்யும் விதத்தில் அது அமையாது என்பதால் இதை எதிர்க்கிறேன். இதேபோல் பல்கலைக் கழகங்கள் நிறுவுவதற்கு பலர் நிலம் எழுதி வைக்கும்போது, அப்படி நிலம் எழுதி வைப்பவர்களை பாராட்டும்போது, அந்த நிலத்தை சர்க்காரே பயன்படுத்தி கூட்டுறவு முறையில் பயிரிடுவதற்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து கொடுத்து அவ்வருவாய் மூலம் பல்கலைக் கழகம் போன்றவைகளை பராமரிக்கவேண்டும்.

1-00 p.m. காப்பித் தோட்டம், தேயிலைத் தோட்டம் இவை போன்றவைகளுக்கு விதிவிலக்கு கொடுப்பதின் மூலம் பெரும் மிராசுதார்களுக்குத்தான் நன்மை தேடி தருபவர்களாக ஆவோம், ஏழை எளியவர்களுக்கு இதனால் எந்தவிதமான லாபமும் ஏற்படப் போவதில்லை. ஆகவேதான் இதற்காக கொடுக்கப்பட்டிருக்கும் விதிவிலக்கை எதிர்க்கவேண்டியவனாய் இருக்கிறேன். சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில், நான் தமிழகத்தில் அதிகமாக சர்க்கரை ஆலைகள் ஏற்பட வேண்டும் என்பதை ஒத்துக் கொள்வதோடுகூட, அதற்காக வாதாடுபவனும்கூட. ஆனால் தஞ்சை, மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதிகமாக சர்க்கரை ஆலைகள் இருக்கிறது என்றோ அல்லது வேறு சில இடங்களில் சர்க்கரை ஆலைகள் அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தின் பேரில், அதற்குரிய நிலங்களுக்கு நாம் விதிவிலக்கு கொடுப்பதால் அதிலுள்ள ஆதாயத்தின் மூலம் விவசாயிகள் எந்த விதத்திலும் பயனடையப் போவதில்லை. தனிப்பட்ட ஆலை முதலாளிகள்தான் லாபமடைகிறார்கள். சிறிய அளவில் இரண்டு ஏக்கர் அல்லது மூன்று ஏக்கர் என்று வைத்துக்கொண்டு அதில் கரும்பு விவசாயம் கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு அவர்களுடைய கரும்புக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல், அவர்கள் தேவைப்படுகிற நேரத்தில் நிலத்திலிருந்து வெளியேற்ற முடியாத காரணத்தினால் அவர்கள் நஷ்டமடைகிறார்கள். அதோடு சில நேரங்களில் கரும்பு காய்ந்து போகிற நேரத்தில் அவர்களுக்கு இடை குறைந்துபோகிறது, இம்மாதிரியான நிலைமைகள் எல்லாம் ஏற்படுகின்றன. ஆகவேதான் இந்த சர்க்கரை ஆலைகளை வெள்ளைக்கார நபர்கள் நடத்திக்கொண்டிருந்தாலும் சரி, இங்குள்ளவர்கள் நடத்திக்கொண்டிருந்தாலும் சரி இவர்களுக்கு கொடுக்கப்படும் விதிவிலக்கு தேவையில்லை என்று சொல்லவேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

மேலும் ஆலயங்களுக்கும், மடங்களுக்கும் முன்னால் 200 ஏக்கர் வீதம் கொடுத்துவிடலாம் என்று மசோதாவில் சொல்லப்பட்டிருந்தது. பின்னால் இதற்கு அறவே விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்தில் பல தடைகள் இருக்கின்றன என்ற கருத்தை தெரிவிக்கின்ற நேரத்தில் இதற்கென்று தனியாக ஒரு மசோதா கொண்டுவரப்படும் என்ற கருத்தையும் அற நிலைய பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த மசோதா கொண்டுவருவதற்கும் நில உச்சவரம்பு சட்டத்திற்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்ன சம்பந்தம் இருக்கிறது என்று தெரியவில்லை. நிலத்தை அதிகமான அளவில் மீட்டு எடுக்கவேண்டும் என்பது நமது நோக்கம். அதற்கு இம்மாதிரியான தடைகள் ஏதாவது அரசியல் சட்டத்தில் இருந்தால் அதை திருத்துவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு நமது ராஜ்ய சர்க்கார் சிபாரிசு செய்யவேண்டும். அவ்விதம் திருத்தி அதன் மூலம் கிடைக்கின்ற நிலங்கள் மூலமாகத்தான் ஏழை மக்கள் நன்மை அடையமுடியும். உண்மையிலேயே வினோபாஜி அவர்கள் சொல்லுகின்ற கொள்கைகளை ஒத்துக்கொள்வதாக இருந்தால், சர்வோதய மண்டல் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தங்களை எல்லாம் இந்த சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டும். உண்மையில் இந்தச் சர்க்காருக்கு பூதான இயக்கத்தில் நம்பிக்கை இருக்குமானால், அவர்கள் தெரிவித்திருக்கும்

25th September 1961] [Sri A. Govindasami]

ஆட்சேபணைகளை எல்லாம் இந்த சர்க்கார் கவனிக்கவேண்டும். அதில் முக்கியமாக தெரிவித்திருக்கின்ற விதிவிலக்குகளை எல்லாம் ரத்து செய்யவேண்டும். அதே நிலையில்தான் நானும் சொல்லுவது, இதில் தேவையில்லாமல் கொடுக்கப்பட்டிருக்கும் பல விதிவிலக்குகளையும் ஒட்டுமொத்தமாக நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri J. MATHA GOWDER** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த உச்ச வரம்பு மசோதாவில் 70-வது கிளாஸ் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எந்தெந்த நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்பதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இதில் குறிப்பாக "any land in any hill area" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய சிலர் குறிப்பிட்டார்கள், பிளான்டேஷனுக்கு மட்டும் ஓரளவுக்கு நிலங்களை கொடுத்துவிட்டு மற்ற நிலங்களை எல்லாம் எடுத்துக்கொள்ளலாம் என்று. பொதுவாக எங்கள் பகுதியைப் போன்ற மலைப் பிரதேசங்களை எடுத்துக்கொண்டால், பிளான்டேஷன் தவிர வேறு நஞ்சை பூமி எவ்வளவு இருக்கும் என்பதைப்பார்த்தால், பெரிய அளவுக்கு கிடையாது என்றே சொல்லிவிடலாம். சிலர் உருளைக்கிழங்கு பயிரிடுகிறார்கள் என்று சொல்லக்கூடும். உருளைக்கிழங்கு பயிரிடுபவர்களை எடுத்துக்கொண்டால் இன்றையதினம் அவர்கள் மிகவும் ஏழைகளாக இருக்கிறார்கள் என்பதை நான் திட்டவட்டமாக சொல்ல முடியும். இந்த நிலைமையில் என்னுடைய ஜில்லாவைப் பொறுத்தவரையில் பூமியை பெருவாரியாக பிரிக்க முடியாது. நல்ல முறையில் தேயிலையை பக்குவப் படுத்தவேண்டுமானால் குறைந்தது மூன்று லட்சம் அல்லது ஐந்து லட்சம் வேண்டும். இதையெல்லாம் நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். தேயிலை தோட்டத்தை நாம் நெல் பயிரிடுவதைப்போன்று நினைக்கக்கூடாது. ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று எடுத்து தேயிலைத் தோட்டம் நடத்த முடியாது. தேயிலையை நல்லமுறையில் பக்குவப்படுத்த வேண்டுமென்றால் தொழிற்சாலை பக்கத்தில் இருக்கவேண்டும். அப்படி அமைக்கவேண்டுமென்றால் சிறிய அளவில் தேயிலைத் தோட்டம் வைத்திருந்தால் போதாது. குறைந்தது 500 ஏக்கர் தேயிலைத் தோட்டம் இருந்தால்தான் நல்ல முறையில் தேயிலையை உற்பத்தி செய்ய முடியும். சமீபத்தில்தான் கூட்டுறவு முறையில் தேயிலை தொழிற்சாலை ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த நிலைமையில் திடீரென்று இந்த பூமிகளை எல்லாம் பிரித்தால் நிச்சயமாக இந்த தொழில் பாதிக்கும். அதே நேரத்தில் இதிலுள்ள முன்னேற்றமும் தடைப்படும். தேயிலையைப் பொறுத்தவரையில் நாம் உலக மார்க்கட்டை பிடித்தாகவேண்டும். வெள்ளைக்காரர்கள் பலர் தேசம் சுதந்திரம் அடைவதற்கு முன்னால் தேயிலைத் தோட்டங்களை வைத்திருந்தார்கள். தேசம் சுதந்திரம் அடைந்தவுடன் அப்படியே இதையெல்லாம் விற்றுவிட்டு போய்விட்டார்கள். அவர்கள் இப்போது சௌத்-ஆப்ரிக்காவில் போய் நம்முடைய தேயிலைக்கு போட்டியாக உற்பத்தி செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் இன்றைக்கு உலக மார்க்கட்டில் போட்டி போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதன் காரணமாக தங்கள் தேயிலையின் நிலைமை என்னவாகுமோ என்று இங்குள்ளவர்கள் பயந்துகொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக நாம் உலக மார்க்கட்டில் போட்டி போட்டாகவேண்டும் என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்த நிலைமையில் இருக்கின்ற பூமியை இன்னும் பிரித்துவிடுவார்கள் என்றால் நிச்சயமாக நாம் உலக மார்க்கட்டில் போட்டி போட முடியாது. இதன் மூலம்தான் நாம் அன்னிய நாட்டு செலாவணியை சம்பாதிக்க முடியும் என்பதையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். 20 அல்லது 30 ஏக்கர் என்று வைத்திருக்கக் கூடியவர்கள் உற்பத்தி செய்யும் தேயிலையானது இன்று வெளி நாடுகள் எதற்கும் போவதில்லை; கொச்சின், பம்பாய் போன்ற இடங்களுக்குத் தான் சிறிய அளவு அனுப்பிக்கொண்டிருக்கக்கூடிய நிலையிருக்கிறது. பெரிய அளவில்தான் வெளிநாட்டுக்கு அனுப்பிக்கொண்டிருக்கவேண்டுமென்றால் நல்ல முறையில் தேயிலை தொழிற்சாலையை வைத்து நடத்திக் கொண்டிருக்கவேண்டும். அந்த முறையில்தான் தேயிலைத் தோட்டங்கள்

நடத்துகின்ற இடத்தில் பிரிவு அவசியமா என்பதை நாம் பார்க்கவேண்டும். தொழிலாளர்களுடைய நலன்களை எடுத்துக்கொண்டால் 20, 30 ஏக்கர் என்றிருந்தால் தொழிலாளர்களுக்கு பல சலுகைகள் கிடைக்காது. ஆகவே 500 ஏக்கர் என்றளவில் இருப்பதை எல்லாம் பிரிக்கக்கூடாது என்று சட்டமாகக்கொண்டு வரவேண்டும் என்று இந்த சபையிலே நான் சொல்லியிருக்கிறேன். இப்போது பல தோட்ட முதலாளிகள் தங்கள் சொந்தக்காரர்கள்பேரில் பெரிய அளவில் இருந்த தோட்டங்களை எல்லாம் பிரித்துக்கொண்டார்கள். அவர்கள் குடும்பத்திலேயே பிரித்துக்கொண்டு விட்டார்கள். இந்தச் சட்டம் வருவதற்கு முன்பேயே பிரித்துக்கொண்டு விட்டார்கள். ஐந்தாறு மாதங்களுக்கு முன்பு தேயிலைத் தோட்டங்களைப் பிரிப்பதால் தொழிலாளர் சட்டத்தினால் பாதிக்கப்படாது என்று ஒரு சட்டத்தை மத்திய சர்க்கார் நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்த நிலையில் இந்த உச்ச வரம்புச் சட்டத்தை நிறைவேற்றினால் மத்திய சர்க்கார் சட்டத்திற்கும், இந்தச் சட்டத்திற்கும் முரணாக இருக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்தச் சிக்கலை அனுசரித்துத் தான் பிளானிங் கமிஷனிலே ஒரிஜினல் பில்லிலே கொடுத்திருந்தார்கள். பிளான்டேஷனை மாத்திரம் எக்ஸெம்ப்ஷன் செய்து விடலாம் என்று தெரிவித்தார்கள். லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு உச்ச வரம்பு கட்டவேண்டுமென்று சொல்லிவிட்டு, பிளான்டேஷனை விட்டுவிடலாம் என்று சொன்னது மலைத் தோட்டக்காரர்களுக்குப் பரிந்து பேசுவதற்காகச் சொன்னார்கள் என்று நினைக்கக்கூடாது. அவர்களுக்கு ஏதோ சலுகை கொடுப்பதற்காகச் செய்துவிட்டதாக நினைக்கக்கூடாது. அங்கு இருக்கும் நிலைமையை அனுசரித்து, நம் நாட்டின் தேயிலையின் தரம் குறையக் கூடாது, ஒட்டுமொத்தமாக 500 ஏக்கருக்குக் குறைந்தால் நல்ல முறையில் தேயிலையை உற்பத்தி செய்யமுடியாது, உலக மார்க்கெட்டைப் பிடிக்க முடியாது என்ற கண்ணோட்டத்தோடு எக்ஸெம்ப்ஷன் கொடுத்திருக்கிறார்கள். மற்ற பூமிகளுக்கு ஏன் உச்ச வரம்பு கட்டக்கூடாது என்று தெரிவிக்கப்படுகிறது. அதற்கு பூமிகள் இல்லை என்று திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்கிறேன். நீலகிரியில் பிளாண்டேஷன் தவிர மற்ற பூமிகள் உச்ச வரம்புக்குள்தான் இருக்கின்றன. ஒருவரும் அதற்கு மேல் பூமி வைத்துக் கொள்ளவில்லை. ஆகையால் பொதுவாக ஹில் ஏரியா என்று போட்டு விடுவது நலமாக இருக்கும். அடுத்தபடியாக 5-லே **any land in any hill area** என்று போட்டுவிட்டு, அடுத்த பிரிவிலே **all plantations in existence on the date of the commencement of this Act** என்று போட்டிருப்பது ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது. ஹில் ஏரியா என்று பொதுவாகப் போட்டுவிட்டு "ஆல் பிளாண்டேஷன்ஸ்" என்று ஏன் போடவேண்டுமென்று புரியவில்லை. இதில் ஏதாவது சிக்கல் ஏற்படாத வகையில் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆக்ட் கம்மென்ஸ்மெண்ட் ஆனதிலிருந்து என்று சொல்லும் போது, அதற்குப் பிறகு பிளான்டேஷன் ஏரியாவின் நிலை என்ன என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சற்று விளக்கினால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதற்கு மேலும் பிளாண்டேஷன் இருந்தாலும் எக்ஸெம்ஷன் இருக்கவேண்டும். பொதுவாக ஹில் ஏரியா என்று போட்டிருப்பதைப்பற்றி கவலை இல்லை. அடுத்த பிரிவில் பிளாண்டேஷன் என்று போட்டிருப்பதன் காரணத்தை அமைச்சர் அவர்கள் சற்று விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நாம் சர்க்கரை ஆலைக்கு விதி விலக்கு கொடுத்திருக்கிறோம் ஏன் விதி விலக்கு கொடுத்திருக்கிறோம்? 100 ஏக்கராவது கரும்பு உற்பத்தி செய்தால்தான் ஒரு கரும்பு ஆலை வைக்க முடியும் என்று வைத்திருக்கிறோம். அதே கருத்தில்தான் இத்தனை ஏக்கராவது இருந்தால்தான் தேயிலை உற்பத்தி செய்ய முடியும் என்று வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் அதில் எந்த விதமான தவறும் இல்லை என்று தெரியும். இதைப்பற்றி நன்கு சிந்திக்க வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

25th September 1961] **[Sri J. Matha Gouder]**

சிறிய தோட்டங்களைப் பொறுத்த வரையில் இப்போது அவர்கள் சர்க்காரை அணுகி எங்களுக்கு வசதி செய்துகொடுங்கள், நல்லவிதமாக பக்குவப்படுத்த தொழிற்சாலைக்கு சாதனங்கள் கொடுங்கள் என்று கேட்கும் நேரத்தில் பெரிய தோட்டங்களைப் பொறுத்த அளவில் சிக்கல் ஏதும் ஏற்படுத்திவிடக்கூடாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த பிளாண்டேஷன்களைக்கூட பிரிப்பதற்கு ஒரு காலம் உண்டு—இல்லை என்று சொல்லவில்லை. சிறிய தோட்டங்கள் நல்லவிதமாக பயிர் செய்து, நல்ல முறையில் தேயிலையைப் பக்குவப்படுத்திய பிறகு, உலக மார்க்கெட்டைப் பிடித்த பிறகு, இந்த பிளாண்டேஷன்களைப் பிரிப்பதில், ஆட்சேபணை இல்லை. அந்தக் காலம் வரும்போது பெரிய தோட்டங்களைப் பிரிப்பதில் கவனம் செலுத்தலாமே தவிர இன்றைக்கு இதிலே குழப்பத்தை ஏற்படுத்திவிடக் கூடாது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* **Sri K. G. PALANISWAMI GOUNDER** : கனம் சபைத் தலைவர் அவர்களே, நான் **70**-வது பிரிவிற்குக் கொடுத்திருக்கும் திருத்தத்தை சபை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே ஜூலை **1959**–க்கு முன்பு வைத்த தோப்புகளுக்கும், பழத் தோட்டங்களுக்கு மாத்திரம் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது நாட்டிலே மிகவும் முக்கியமானது இந்த இரண்டு விஷயங்களும். அதற்காக **1959**, ஜூலைக்கு முன்பு இவைகளை வைத்திருப்பவர்களுக்கெல்லாம் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதே போல அதற்குப் பிற்பாடு வைத்துக்கொள்வதற்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டுமென்பதைத்தான் நான் வற்புறுத்துகிறேன். **1959**-க்குப் பிற்பாடு சந்தர்ப்பம் கொடுக்கவில்லையானால்—நமக்கு தேங்காய் மிக மிக அவசியமானது, நமக்கு பற்றாக் குறையாக இருக்கக்கூடியது—இருப்பினும் தென்னையை உற்பத்திசெய்ய யாரும் முன் வரமாட்டார்கள். அந்த நிலைமையை உத்தேசித்து **1959**-க்குப் பின்னும் ஓரளவு வைத்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டுமென்று நான் சொல்லிக்கொள்கிறேன். பூர்ணமாக எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ள சந்தர்ப்பம் கொடுக்கவில்லையானாலும் **30** ஸ்டாண்டர்டு எக்கர் இருக்கக்கூடிய ஒரு யூனிட்டுக்கு குறைந்த பட்சம் **10** எக்கராவது **7½** அல்லது **5** எக்கராவது வைத்துக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் கொடுப்போமானால்தான் இந்த நாட்டிலே தேங்காய், பழங்கள் முதலியவைகள் அபிவிருத்தி அடைய முடியும். அந்த மாதிரி இல்லையென்றால் தோப்புகள் வைப்பது நாளடைவில் குறைந்துகொண்டேதான் வரும். பிறகு வெளி நாடுகளிலிருந்துதான் சிரமப்பட்டு வாங்கவேண்டியதாக இருக்கும். இதையெல்லாம் யோசித்து நிச்சயமாக **1959**–க்குப் பிற்பாடும் வைத்துக்கொள்வதற்கு நாம் அனுமதித் தாகவேண்டும். பரிபூர்ணமாக அனுமதி அளிக்கவேண்டாம். இதைப் பற்றி நன்கு யோசித்து **30** எக்கர் ஒரு யூனிட்டாக வைத்துக்கொண்டிருக்கின்றவர்களுக்கு **4**-ல் ஒரு பங்கு, **7½** எக்கராவது, **10** எக்கராவது, **5** எக்கராவது வைத்துக்கொள்ளலாம் என்று நிர்ணயிக்கவேண்டும். அப்படி நிர்ணயித்தால்தான் தோப்புகள் வைத்துக்கொள்ள வசதியாக இருக்கும். இன்று **40–50** எக்கர் தோப்புகள் வைத்து இருக்கிறவர்களுக்குக்கூட சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறோம். சாதாரணமாக எல்லோரும் தோப்பு வைத்துக்கொள்ள முடியாது, ஒரு சிலர்தான் வைத்துக் கொள்ள முடியும். ஆகையால் எனது திருத்தத்தை இந்தச் சபை அவசியம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **Sri R. SRINIVASA IYER** : ஸார், இந்த 70-வது க்ளாஸ் உச்ச வரம்பு சட்டத்தைப் பொறுத்த அளவில் விதி விலக்கு பற்றியது. இதிலே கனம் அங்கத்தினர் பழனிசாமி அவர்கள் கொடுத்திருப்பது ஸப்-க்ளாஸ் **(1)**-ஐ, அதாவது **"(i) any land held by the Central Government or any State Government or any local authority;"** என்பதை எடுத்து விடவேண்டுமென்று சொல்லுகிறார். சென்ட்ரல் கவர்ன்மெண்டுக்கு இன்றைக்கு எவ்வளவோ நிலம்—பெரிய பெரிய இடங்கள்

அவசியமாக இருக்கிறது. கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்கள் கூட ஏரோட்ரோம் எதற்காக என்று கேட்டார். (ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி குறுக்கீடு.) அன்றைய தினம் சிலரை முந்திரிக்கொட்டை என்று ஆரம்பித்தீர்களே, நீங்கள் ஏன் இப்படி எழுந்திருக்கிறீர்கள். அவசியம் முந்திரிக்கொட்டை வேண்டும் என்பதைப்பற்றி பிற்பாடு வருகிறேன். சொல்லி முடிப்பதற்கு முன் ஏன் ஆரம்பிக்கிறீர்கள்.

DEPUTY SPEAKER: The hon. Member should address only through the Chair and not address the hon. Member direct.

*SRI R. SRINIVASA IYER: ஏரோட்ரோமுக்காக வாங்கிய இடத்தை தரிசாக வைத்திருக்கிறார்கள். அது இன்றைக்கு உபயோகத்திலில்லை. வார்டைமிலே வாங்கியது. அதை எந்த சந்தர்ப்பத்திலும் உபயோகப்படுத்திக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும். இந்த மாதிரி இடத்தை நாளைக்கு வாங்க முடியாது. குறைந்த விலைக்கு வாங்கியது என்று ரிஸர்வ் செய்யப்பட்டு வைத்திருக்கிறார்கள். புதிதாக எவ்வளவோ ஏரோட்ரோம்கள் ஏற்படுத்தி வருகிறார்கள். இங்கேயும் ஒரு ஏரோட்ரோம் ஏற்படலாம். செண்ட்ரல் கவர்ன்மெண்டுக்கு, ஸ்டேட் கவர்ன்மெண்டுக்கு, லோக்கல் அத்தாரிட்டிக்கு பல இடங்கள் மொத்தமாக இருக்கும். புறம்போக்கு நிலம் சாகுபடிக்கு லாயக்காக இருந்தால் பிரித்துக்கொடுக்கும் விஷயத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள், இன்னும் கொடுக்கப் போகிறார்கள். உச்ச வரம்புக்குள் கொண்டுவந்தால் அதை ஆதரைஸ்ட் ஆபீஸர் எடுக்க வேண்டும். நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். சர்க்காருக்கு சர்க்காரே நஷ்டஈடு கொடுக்க வேண்டும். இதையெல்லாம் பாயிண்ட் அவுட் செய்வதற்காகத்தான் இதைச் சொன்னேன். **(ii) (a) any land held by charitable or educational institution of a public nature.** இதை எடுத்துக்கொண்டால், சில தர்மங்களுக்கு எழுதிவைத்திருப்பதில் ஏதோ கொஞ்சம் தொகைக்கு தர்மத்திற்கு எழுதிவைத்துவிட்டு, பாக்கியையெல்லாம் சொந்தத்திற்கு எடுத்துக்கொள்வது என்பது. இதற்கு 6-வது செக்ஷனிலே புரொவிஷன் பண்ணியிருக்கிறது. அதன்படி, தர்மத்திற்கு எவ்வளவு தேவையோ, அதை மட்டும் விதிவிலக்களித்துவிட்டு, மிச்சத்தை இந்த உச்ச வரம்பின் கணக்குக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே ஏமாற்ற முடியாது. அதுமாத்திரமல்ல, இன்றைக்கு கல்விக்காக தர்மமாக பெருவாரியாக எழுதி வைக்கப்பட்டிருந்தால், இன்றைக்கு தர்மமே வேண்டாமென்று அர்த்தமா ? இன்றைக்கு நிலத்திற்கு உச்சவரம்பு வரப்போகிறது என்று தெரிந்து, கல்விக்காகவாவது உபயோகப்பட்டு போகட்டும் என்ற எண்ணத்திலே அதற்காக பெருவாரியான நிலங்கள் எழுதிவைக்கப்பட்டிருந்தால், உண்மையிலே சொத்துக்கள் பூராவும் கல்விக்காகவே உபயோகப்படுவதாக இருந்தால், அது தவறா? அதற்கு விதி விலக்கு அளிக்கத்தான் கூடாதா ? எந்த டிரஸ்டுகளையும் இதன்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவேதான் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். **In item (ii) (a) after the words " public nature "** ***add*** **the words " for the use or maintenance of hospitals or sanatoria "** இதைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். ஆனால் டிரஸ்ட் என்பதற்கு டெபனிஷன் கொடுத்தாகி விட்டதால், அது சேர்த்துக்கொள்ளப்படும் என்று சொல்லிவிட்டதால், அதையும் நான் வற்புறுத்த அபிப்பிராயப்படவில்லை. அதிலே சாரிடபிள் என்றால், ஆஸ்பத்திரி, சானிடோரியம் எல்லாம் வந்துவிடுகிறது என்று கனம் ரெவினியூ அமைச்சரவர்கள் சொன்னார்கள்.

அடுத்தாற்போல். தர்மத்திற்கெல்லாம் விதிவிலக்குக் கூடாதென்று சொல்லிவிட்டு, **(vii) lands converted on or before 1st day of July 1959 into orchards, or topes or arecanut gardens, whether or not such lands are contiguous or scattered "** என்று விதிவிலக்கு இருப்பதையும் இதற்கும் விதிவிலக்கு கூடாதென்று பெரிய வாதம் செய்யப்பட்டது. இன்றைக்குத் தென்னந் தோப்புகளை எடுத்துக்கொண்டால், தென்னை மரத்தை எடுத்துக்

25th September 1961] [Sri R. Srinivasa Iyer]

கொண்டால் அதன் கன்றுகளுக்கு மட்டும் "தென்னம் பிள்ளை" என்று தான் சொல்வார்கள். அதே போல் மாங்கன்று என்று சொல்வார்களே தவிர, அதற்கு மாம்பிள்ளை என்று சொல்ல மாட்டார்கள். மற்ற மரங்களின் சிறு செடிகளுக்கு மரத்தின் பெயரைச் சொல்லி கன்று என்பார்கள். ஏன் அவைகளை பிள்ளையை வளர்ப்பதுபோல் வளர்க்க வேண்டும்.

(கனம் அங்கத்தினர் : கிளிப்பிள்ளை என்றுகூட சொல்வார்கள்.)

இங்கே மாத்தைப்பற்றித்தான் பேச்சு. அப்படிச் சொல்வதாக இருந்தால், கிளிப்பிள்ளை, ஆண்பிள்ளை, பெண்பிள்ளை என்றுகூட சொல்லலாம். அது எனக்கும் தெரியும். மாத்தைப்பற்றி எடுத்துக் கொண்டால், தென்னைக்கு தென்னம்பிள்ளை என்றுதான் சொல்வார்கள். வேறு எந்த மரத்திற்காவது இப்படிப் பிள்ளை என்று சொல்கிறார்களா ? சொல்லுங்களேன் பார்க்கலாம். மறுபடியும் இப்படி குறுக்கே பேச வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் இப்படி பேசுகிறீர்கள். சபையின் தலைவர் என்னை கண்ட்ரோல் பண்ணுகிறார். இப்போது தென்னம்பிள்ளைகளை யெல்லாம் எப்படி வளர்க்க வேண்டுமென்பதைப் பார்த்தால், அவைகள் வளர்க்கப்படும்போது, வண்டுகள் (Rhinocerus beetle) அதன் வேரைச் சாப்பிட்டு விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அப்படி வண்டு அதன் வேரை சாப்பிட்டு விட்டால், மறுபடியும் வேறு தென்னம்பிள்ளைகளை வைத்து வளர்க்கவேண்டும். இப்படி வளர்த்தாலும், அதன் பலனை அனுபவிப்பதற்கு 10 வருஷங்கள் காத்திருக்கவேண்டும். இப்படி கஷ்டப்பட்டு, அதன் காய்ப்பு வருகிற நேரத்தில் அவைகளை எடுத்துக் கொள்வது என்று சொன்னால், அவைகளை பங்கு பிரித்துக் கொடுக்கலாம் என்று சொன்னால் எப்படிச் செய்வது. பிரயாசை எதுவும் இல்லாமல், பிறர் சொத்தை பிரித்து எடுத்துக்கொள்வது என்பது சுலபம். ஆனால் கஷ்டப்பட்டு வளர்த்தவன் கொடுத்து விடுவது என்பதுதான் கஷ்டம். இப்போது Philippines-லிருந்தும், சிலோனிலிருந்தும் வருஷம் ஒன்றுக்கு 25 கோடி ரூபாய்க்கு கொப்பறை இறக்குமதி செய்துகொண்டு வருகிறோம். இப்படிப் பிரித்து விட்டால் தேங்காய் உற்பத்தி பெருகுமா, அதெல்லாம் என்ன ஆகிறது ? நண்பர் கரிய கவுண்டர் அவர்கள் ஏற்கனவே தென்னந்தோப்புகளைப்பற்றி பேசும்போது உற்பத்தியெல்லாம் பாதிக்கும், ஆகவே அதற்கு வரம்பு வைக்கக் கூடாது என்றெல்லாம் நன்கு எடுத்துக் காட்டினார்கள். அதற்கு என்னென்னமோ வியாதிகள் எல்லாம் வருகிறது என்றெல்லாம் எடுத்துக் கூறினார்கள். Leafdisease, Nephantis Serinopa என்னும் பூச்சி வியாதிகள் பாதிக்கின்றன. அவைகளிலிருந்து பாதுகாக்கவேண்டும். அதைப்போல் மாந்தோப்பும் இருக்கிறது. இதிலே எல்லாம் பலன் கிடைக்க வேண்டுமென்று சொன்னால் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. இப்படி காத்திருந்து பலனடையக்கூடிய தோப்புகளையெல்லாம் விதிவிலக்கிலிருந்து நீக்குவது அல்லது அவைகளுக்கு காபந்து செய்யாமல் இருப்பது நல்லதல்ல. நியாயமுமல்ல. தோப்புகளுக்கு எல்லாம் விதிவிலக்கு அளித்து, மரங்கள் அதிகமாக வளர்வதற்கான ஊக்கம் கொடுக்க வேண்டும். மரம் வளர்ப்பது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. சாதாரணமாக, ஒரு மரம் வெட்டினால், இரண்டு மரம் வைக்க வேண்டுமென்று சாஸ்திரத்தில் சொல்வார்கள். இப்போது யாரும் மரம்வைப்பதில்லை. ஆங்காங்கே மரத்தை வெட்டிக்கொண்டுதான் வருகிறார்கள். மரத்தை வெட்டுவது என்பது மிகவும் எளிதான காரியம். வளர்ப்பது என்பதுதான் கஷ்டமானது. ஆகவே இதைப்பற்றி யெல்லாம் செலக்ட் கமிட்டி பரிசீலனை செய்து விலக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. பல மாநிலங்களுக்கு விலக்களிக்கப்பட்டிருக்கிறது. அது நியாயமானதுதான். அதேபோல் இந்த தோப்புகளுக்கு விதிவிலக்கு அளிப்பதும் நியாயம்தான். அதை எப்படி எந்த முறையில் நியாயமாகச் செய்யலாம் என்பதை சர்க்கார் யோசித்துப் பார்த்துச் செய்யலாம். அதே நோத்தில்லே. (vii) lands converted on or before the 1st day of July 1950 into orchards or topes or arecanut gardens, whether or not such lands are contiguous or

scattered (viii) any land exclusively used for growing fuel trees etc...' என்று விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதைகூட எடுத்துவிட வேண்டு மென்று சொல்லப்படுகிறது. சனிக்கிழமையன்று இதைப்பற்றி விவரமாக இந்தச் சபையிலே பேசிவிட்டேன். அதுகூட ரொம்ப கணக்காக போடப்பட்டு இருக்கிறது. இது தவிர '(x) any land used exclusively for dairy farming or livestock breeding and in respect of which the Land Board has granted permission under section 27.' என்றும் விதிவிலக்கு கொடுக்கப்பட் டிருக்கிறது. இதற்கு செக்ஷன் 27-ஐ எடுத்துச் சொல்லி விடலாம். முன்பு சொன்னது தோப்பு. அதேபோல் இதற்கு 71-வது கிளாசையும் எடுத்துக் கொள்ளலாம். அதன்படி 50 ஏக்கர் நிலம் வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆகவே இதற்கு இந்த மசோதாவின் செக்ஷன்கள் 27-யும் 71-யும் சேர்த்துப் பார்த்தால், இதற்கு லாண்ட் ரெவின்யூ 1·25 ரூபாயும் அதற்கு குறைவாயுமுள்ள நிலம் என்று போட்டு, லாயக்கில்லாத நிலங்கள் என்று சொல்லி இப்படி மேய்ச்சலுக்காக வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'on the date of the commencement of this Act, held land used exclusively for grazing and assessed to land revenue at Rs. 1·25 and below per acre ...' என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது நிலத்திர்வை 1.25 க்கு கீழே இருக்கவேண்டும். மேய்ச்சலுக்காக ஒதுக்க ஆரம்பிக்கப்படும் தேதி 1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் தேதிக்கு முற்பட்ட தேதியாக இருக்கவேண்டும். அப்படி வைத்திருப்பதை exclusive ஆக மேய்ச்சல் துறைக்காக வைத்திருக்கவேண்டும். இது கூட, லாண்ட் போர்டுக்குப் போய் அங்கு பர்மிஷன் வாங்கி இருக்கவேண் டும் என்றிருக்கிறது. கால்நடைக்கு இவ்வளவு நிலம் ஒதுக்கவேண்டு மென்று சொன்னாலும்கூட, அதற்கும் முட்டுக்கட்டை போட்டுத்தான் வைத் திருக்கிறார்கள்.

அதோடுகூட, கடைசியிலே பழனிசாமி அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தம். அது உண்மையிலேயே எந்த நோக்கத்தோடுகூட அவர்கள் இப்படிப் போட்டார்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. அப்படிச் சொல்கிறதைகூட, 70வது கிளாசிலே நோட் என்றுதான் போட்டிருக்கிறார் கள். அந்த திருத்தம்—

"Note 1: The net annual income from the lands to be retained under this section in respect of religious trusts, orchards, topes, arecanut gardens, lands used exclusively for growing fuel trees, dairy farms or pasture lands should not exceed rupees four thousand eight hundred."

இது எக்ஸெம்ஷன் செக்ஷன். நல்ல வேளை, இந்தத் திருத்தம் கொடுத் திருப்பதிலேயாவது கம்யூனிஸ்ட் அங்கத்தினர் 5 பேர்கள் உள்ள ஒரு குடும்பத்திற்கு ரூ. 4,800 வருஷ வருமானம் தேவை என்றுவது அவர் ஒப்புக்கொண்டிருக்கிறாரே? அந்த அளவுக்கு சந்தோஷப்படவேண்டி யிருக்கிறது. இந்த ரூ. 4,800 என்று சொல்வதை அவர்கள் எந்தக் கணக் கிலே வைத்து கணக்கிட்டார்கள் என்பது புரியவில்லை. வருஷ வரும்படி ரூ. 4,800 என்று சொல்லும்போது. சர்க்கார் வருமான வரிக்குள் அவர் வந்து விடுகிறாரே, அதற்கு எங்கே போகிறது? இந்த வருமானம் ஒரு வருஷம் உயரும், ஒரு வருஷம் குறையும். நான் வைத்திருந்த தென் னந் தோப்பிலே உள்ள மரங்கள் 1952–ல் புயல் வந்து அடித்துக்கொண்டு போய்விட்டது. பின்னர், மறுபடியும் 2,000 தென்னம் பிள்ளைகளை வைத்து கிளப்பினேன். அவைகளும் 1955–லே வந்த புயலிலே போய்விட்டது. என்ன பண்ணுகிறது? ஆகவே தோப்புகளுக்கு ரூ. 4,800 வரும்படி என்று திட்டமாகச் சொல்லக்கூடாது. சொல்லவும் முடியாது. தவிர, யாரேனும் பிள்ளைகள் படிப்பதற்காக என்று 600 ஏக்கர் நிலம் எழுதி வைத்திருக் கலாம். அப்படிப்பட்ட நிலத்திற்கும் வருஷ வரும்படி 4,800 தான் இருக்கலாம் என்று சொன்னால், அந்தப் பள்ளியிலே படிக்கும் பிள்ளை களுக்கு ஒரு வேளை சோறு போடுவதற்குக்கூட முடியாது. அந்தப் பள்ளி

கூடத்திலே உள்ள வாத்தியார்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாது. ஆகவே டிரஸ்டிற்கு ரூ. 4,800 என்று இருப்பது கூடாது. இதையெல்லாம் இந்த திருத்தத்தில் **Main amendment** ஆக சொல்லப்படவில்லை. நோட் மட்டும்தான் செய்யப்பட்டிருக்கிறது.

Interpretation of statutes by Max Muller படி ரோட் என்பது சரியாகாது. ஒரு எக்ஸ்பிளனேஷன்கூட சொல்லப்படவில்லை. டிரஸ்டிற்கு இவ்வளவு அதிகமான ஏக்கர் இருந்தால், அந்தப் பணத்தை எப்படி உபயோகிப்பது என்று ஒன்றும் சொல்லப்பட வில்லை. அதனாலே 293 வது திருத்தம் அவசியமில்லை என்று சொல்லி அந்தத் திருத்தத்தை நான் எதிர்க்கிறேன். என்று நான் சொல்லுகிறேன். இந்த 70-வது கிளாசிலே ஷுகர் பாக்டரியைப் பற்றியும் வந்துவிடுகிறது. ஆகவே அதைத் திரும்பத் திரும்ப பேச வேண்டிய அவசியமில்லை. எக்ஸெம்ஷன் கிளாசிலே ஷுகர் பாக்டரி இடம் பெற்று விடுகிறது. இன்றைக்கு ஷுகர் பாக்ரிக்கு மட்டும், சர்க்கரை செய்யவேண்டும். அதற்கு 6,000 ஏக்கர் வேண்டுமென்று சொல்லப் படுகிறது. நாங்கள் 1½ கோடி முதல் போடுகிறோம்; எங்களுக்கு இப்படி விதி விலக்குக் கொடுக்காவிட்டால் நஷ்டம் வந்துவிடும் என்றெல்லாம் சொல்லுகி றார்கள். அதே நேரத்தில் இப்போதிருக்கும் சர்க்கரை ஆலைபூராவும் சர்க்கரை செய்யக்கூடிய அளவிற்கு கரும்பு போடவில்லை. இப்படி 6000 ஏக்கர் நிலம் குறைந்தது வேண்டுமென்று சொல்லி இன்னமும் கரும்பு சாகுபடியை விருத்தி செய்யவேண்டியிருக்க ஷுகர் பாக்டரியை இந்த ஜில்லாவிலிருந்து இன்னொரு ஜில்லாவிற்கு கொண்டுபோகக் கூடிய நோக் கத்திலே பேசப்படுகிறது. இதையெல்லாம் பார்ப்பதற்குத்தான் இப்போது ஷுகர் போர்டு அமைக்கப்பட இருக்கிறது. மேலும் லாண்டு போர்டு வேறு இருக்கிறது. அவர்கள் இதைப் பார்த்துக்கொள்வார்கள். அந்த முறையி லே இதைப் பேசுகிறேனே தவிர, வேறொன்றும் இல்லை. இதிலே, 70வது கிளாசிலே உள்ள எக்ஸெம்ப்ஷன் எல்லாம் அவசியம், அதைக்குறைக்கக் கூடாது என்று சொல்லி, நான் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now rise for lunch and meet again at 3 p.m. 1-30 p.m.

[After Lunch—3-00 p.m.]

Sri R. KRISHNASWAMY REDDIAR: கனம் உதவி சபாநாயகர் அவர் களே, இந்த மசோதாவில் எந்தெந்த நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்கலாம் என்ற ஷரத்தின்மீது அமைச்சர் அவர்களின் கவனத் திற்கு இரண்டொரு விஷயங்களை கொண்டுவர விரும்புகிறேன். அதிலே தர்மத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களுக்கு "எனி டிரஸ்டு" டிரஸ்டு நிலங் களுக்கு விதிவிலக்கு அளிகலாம் என்று கண்டிருக்கிறது. காலத்திற் குத் தகுந்த மாதிரி அந்த "எனி" என்ற வார்த்தை குறுகவும் நீளவும் செய்யும். திருச்சி ஜில்லாவைப் பொறுத்த மட்டில், ஒரு தனிப்பட்டவர் பெயரால் ரங்கூன் ரெட்டியார் என்ற ஒருவருடைய பெயரால் ஏழைப் பிள்ளைகளுக்கு வருஷம் பூராவும் அன்னம் கொடுப்பதற்காக சுமார் 300 ஏகரா நிலங்கள் நல்ல நிலங்களாக வாங்கி விடப்பட்டு, அந்த தர்மம் நடந்துகொண்டிருக்கிறது. அதில் ஜாதி மத பேதமில்லாமல் உண்மை யாகவே ஏழைப் பையன்களுக்கு வருஷம் பூராவும் இலவசமாக சாப்பாடு போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, அந்தத் தர்ம ஸ்தாபனம் நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கிறது. வில்வ அர்ச்சனைக்காக என்று நிலம் விடப்பட்டிருந்தால், அதற்கு நெல் வேண்டியதில்லை, வில்வம் இருந்தால் போதும். அதே மாதிரி விளக்குப் போடுவதற்கு என்று நிலம் விடப்பட் டிருந்தால் எண்ணெயும் பஞ்சும் இருந்தால் போதும், விளக்கு ஏற்றிவிட லாம். ஆனால் பிள்ளைகளுக்கு சாப்பாடு போடவேண்டுமென்று சொல்லும் பொழுது உண்மையாகவே அரிசிதான் வேண்டும். அதற்குத் தேவையான அரிசி இல்லாவிட்டால் அந்த தர்மத்தைச் செய்ய முடியாது. வில்வத்தை பணம் கொடுத்து வாங்கிக் கொடுத்து விடலாம். அரிசியை பணம் கொடுத்து வாங்கி அந்த தர்மத்தை தொடர்ந்து நடத்தலாம்

என்று நினைப்பது சில சமயங்களில் அபாயமாக முடிந்துவிடும். ரேஷன் காலத்திலே அந்தப் பிள்ளைகளுக்கு சாப்பாடு போடுவதற்கு சிரமம் ஏற்பட்டது. இம்மாதிரி ஏழைப் பிள்ளைகளுக்கு சாப்பாடு போடுவதற்காக எழுதிவைக்கப்பட்ட நிலங்களுக்கு விதி விலக்கு அளிப்பதற்கு தெளிவான வார்த்தைகள் போடவேண்டும். "எனி டிரஸ்டு" என்ற வார்த்தைகள் இன்றைய நிலைமைக்கு போதுமானதாக இருக்கலாம். காலம் மாற மாற "எனி" என்ற வார்த்தை குறுகலாம். இப்பொழுது "any charitable or educational institution" என்று தனியாகக் குறிப்பிட்டிருக்கிறோம். ''யுனிவர்ஸிடி.'' என்று தனியாகக் குறிப்பிட்டிருக்கிறோம். "மடம், கோவில்" என்பது பொதுவாக ஒரு வியாக்கியானத்திற்கு உட்பட்டிருந்தாலும், அதற்கு வெவ்வேறு வியாக்கியானம் கூறப்படுகிறது. ஆகவே, ஏழைப் பிள்ளைகளுக்கு சாப்பாடு போடுவதற்கு இருக்கக்கூடிய நிலங்களுக்கு விதிவிலக்கு அளிப்பதற்கு சரியான பதங்கள் போட்டு அது மாற்றப்படாமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் வழி வகை காணவேண்டும். அதே மாதிரிதான் திருச்சி ஜில்லாவில் பாப்பம்மாள் சத்திரத்தில் 200 ஏழைப் பிள்ளைகளுக்கு வருஷம் பூராவும் சாப்பாடு போடப் படுகிறது. அம்மாதிரி நிலங்களுக்கு தனியாக குறிப்பிட்டு விதிவிலக்கு அளிக்கும் முறையில் இந்த சட்டத்தில் இடம் செய்து, எந்தக் காலத்திலும் அந்த நிலை மாறுபடாமல் இருக்க வகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI K. ANBAZHAGAN : கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உச்ச வரம்புச் சட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அந்த நோக்கத்தினுடைய பலனை மக்கள் அடைய விடாத வண்ணம் இந்த 70-வது பிரிவு அமைந்து, அதன் மூலம் கிடைக்கிற விதிவிலக்குகளால் இந்தச் சட்டம் பயனற்றதாக ஆகிறது. எனவேதான் பொது வகையாக விதிவிலக்கு கூடாது என்ற கருத்தை எதிர்க்கட்சியைச் சார்ந்த எங்களைப் போன்றவர்கள் பலமுறை வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். அதிலும் குறிப்பாக இந்த விதிவிலக்குகள் எந்த நோக்கத்திற்காக அளிக்கப்படுகின்றன என்று கனம் அமைச்சர்கள் சொல்லுகிறார்களோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றும் அளவுக்கு மட்டும் விதிவிலக்கு அமைத்து, அந்த நோக்கத்திற்கு அப்பாற்பட்ட காரியங்களுக்கு அந்த விதிவிலக்கு பயன்படுவதற்கு இடமில்லாத பாதுகாப்புடன் விதிவிலக்குகள் அளிக்கப்பட்டிருக்கிறதா என்றால் அப்படி இயற்றப்படவில்லை. எந்த அளவுக்கு இந்த விதிவிலக்கு அளிக்கப்படலாம் என்று கேட்டால், பொதுவாக இந்தச் சட்டத்தின் நோக்கம் விவசாயம் செய்யக்கூடிய, உழவு செய்யக்கூடிய நிலங்கள் ஒரு சிலரிடம் குவிந்துவிடாமல், அது பலருக்கும் பங்கிடப்படவேண்டும். பங்கிடப்பட்டு அவர்களுக்கு உரிமையாக்கப் படாவிட்டாலும், உழுகிறவர்கள் எல்லோரும் நன்மை அடையக்கூடிய வகையில் அரசாங்கம் ஏற்படுத்துகிற கூட்டுறவு முறையில் ஏழை உழவர்களுக்குப் பயன்படவேண்டும் என்பதாகும். அப்படி உழவர்களுக்குப் பயன்படவேண்டுமென்று சொல்லிவிட்டு, இன்னின்ன காரியங்களுக்காக இந்த நிலங்களுக்கெல்லாம் விதிவிலக்கு என்று அறிவித்து, அவர்களுடைய முன்னாள் உரிமைகளோடு நிலவுவதற்கு அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுவதினால், இந்தச் சட்டத்தினால் ஏற்படவேண்டிய பலன் ஏற்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தரும நிலையங்களுக்காக நிலங்கள் எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. கோவில், மடங்களுக்குச் செய்ததுபோல வேறு தர்ம காரியங்களுக்காக எழுதப்பட்டிருக்கிறது. அதனுடைய முழுப் பலனும் தர்ம காரியங்களுக்கு கிடைக்கவேண்டும் என்று விதி விலக்கு கேட்பவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதிலிருந்து கிடைக்கிற மேல் வருமானத்தினுடைய பெரும்பகுதி அந்த தர்ம காரியங்களுக்குப் பயன்படவேண்டும் என்பதுதான் நீதியே தவிர, அந்த நிலத்தினுடைய உரிமை முழுவதும் அவர்களிடமிருந்து, அதிலிருந்து அவர்கள் கொள்ளை லாபம் அடையக்கூடுமானால்கூட, அது அவ்வளவும் அவர்களுக்குத்தான் சேரவேண்டும் என்று

சொல்வது நீதியாகாது. அதிலும் குறிப்பாக முன்னாலே மடத்து நிலங்களுக்கும், அற நிலைய நிலங்களுக்கும் இந்தச் சட்டத்தில் நீங்கள் விதிவிலக்கு அளிப்பதே தவறு என்று எடுத்துச் சொன்ன நேரத்தில், அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற பொழுது சொன்னார், இந்தச் சட்டத்திற்கு உட்படவில்லையே தவிர, இந்த சட்டத்தின் நியாயத்திற்கு உட்படுத்துவதற்கு முயற்சிக்கப்போகிறோம், வேறு ஒரு வகையான சட்டம் கொண்டுவரப்போகிறோம் என்று தெரிவித்தார்கள். அப்படி அற நிலைய நிலங்களுக்கு வேறு சட்டம் கொண்டுவரும் வகையில் உழவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முறையிலே, விவசாயிகளுக்கு உரிமை அளிக்கும் முறையிலே, புதிய சட்டம் கொண்டுவருவது அரசாங்கத்தின் நோக்கமானால் இந்தச் சபையிலே அந்தச் சிறு அளவுக்காவது இந்த நிலங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு பாதுகாப்பு இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். அற நிலைய நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுவதே தவறு என்பது எங்கள் வாதம். விதிவிலக்கு அளிப்பதன் காரணமாக, புதுச் சட்டத்தின் மூலம் உழுகிறவர்களுக்கு ஓரளவு பாதுகாப்பு அளிக்க முயற்சிக்கிறோம் என்று சொன்னார்கள். எங்கே அளிக்கப்பட்டது ? இந்த விதிவிலக்குக்கு உட்பட்ட பல நூறு 1,000 ஏக்கர் நிலத்தில் பெருவாரியாகப் பாடுபடுகிறவர்களுக்கு, உழுகிறவர்களுக்குப் பின்னால் எந்தச் சட்டத்தின் மூலமாக எந்த அளவில் பாதுகாப்பு அளிக்க வழி இருக்கிறது என்று நான் கேட்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இங்கே "**Any charitable or educational institution**" என்று சொல்லப்பட்டிருப்பதன் மூலமாக, கல்வித் துறைக்கு, கல்லூரிக்கு என்று எழுதி வைக்கப்பட்ட எந்த நிலங்களுக்கும், வேறு தர்மத்திற்கு எழுதி வைக்கப்பட்ட நிலங்களுக்கும் என்று விளக்கம் இருக்கிறதே தவிர, எப்படிப்பட்ட தரும காரியம் என்று வரையறுக்கப்படவில்லை. இது வரையறுக்கப்பட வேண்டும். ஒரு சமுதாயத்தில் இருப்பவர்களுக்கு தாங்கள் விரும்பும் தரும காரியங்கள் என்று சொன்னால், அவைகள் என்ன மருத்துவ மனைகளா, அனாதைகளைக் காப்பாற்றவா என்று திட்டமாகக் கூற வேண்டும் என்று நான் முதலிலேயே குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாகத் தர்ம காரியம் என்று உச்சவரம்பைக் கைவிடக் கூடாது என்று முன்னாலேயே கூறியுள்ளேன். இரண்டாவதாக எப்படிப்பட்ட தர்ம காரியங்கள் என்பதைத் திட்ட வட்டமாகச் சொல்ல வேண்டும். இந்தத் தரப்பிலிருந்து சில நண்பர்கள் திருத்தங்கள் மூலம், மருத்துவ மனைகள் போன்ற காரியங்களுக்கு மட்டும் என்று வலியுறுத்தி யிருக்கிறார்கள். எவைகளுக்கு மட்டும் என்று தெளிவாக்கப்பட வேண்டும். பள்ளிகளுக்கு நிலங்கள் எழுதி வைக்கப்பட்டிருந்தால், அது பயிர்ச் செலவுக்காக அல்ல, பிள்ளைகளுக்குப் பகல் உணவு அளிக்க அல்ல, பிள்ளைகளுக்கு ஆஸ்டல் வைத்து நடத்த அல்ல, சொத்து என்ற முறையிலேதான். ஏராளமான நிலம் அப்படி எழுதி வைக்கப்பட்டு, அதற்குப் பிறகு, மிராசுதார்களே ட்ரஸ்டிகளாக இருந்து அவர்களாலேயே கண்காணிக்கப்படும் நிலை இருக்குமானால், மேலும் ஒரு புதுவிதமான பண்ணையாகப் போய் விடும், பள்ளிக்கூடத்தின் பெயரால், கல்லூரியின் பெயரால். நான் பணியாற்றிய பச்சையப்பன் கல்லூரி அறநிலையத்துக்குச் சொத்து, நிலம், இருக்கிறது பல்வேறு பெரியவர்கள் எழுதி வைத்தது காரணமாக. அவை குத்தகைக்கு விடப்பட்டு, கிடைக்கவேண்டிய வருமானம் கிடைக்கிறது. அந்த மாதிரி இடங்களில் உச்சவரம்பு ஏன் நுழையக் கூடாது என்று தெரியவில்லை. கிடைக்கும் வருமானத்திற்கு பாதுகாப்பு அளிப்பதை மறுப்பவன் அல்ல நான். பள்ளிக்கூடத்திற்குப் பணம் தேவை என்று நானும கருதுகிறேன். ஆனால், அதற்காக அந்த நிலத்தை எந்த முறையில் சாகுபடிக்கு விட்டிருக்கிறார்களோ அதுவேதான் நீடிக்கவேண்டும் என்று சொல்வது உச்சவரம்புச் சட்டத்தையே கேலிக்கு உரியதாக ஆக்குவது ஆகும்.

அடுத்த பிரிவு "எனி ட்ரஸ்ட்" என்று இருக்கிறது. "ட்ரஸ்ட்" என்று எழுதி வைத்துவிட்டால், ஊரார் கண்ணில் மண்ணைத் தூவிவிடலாம் என்று தெளிவாகத் தெரிகிறது. மிகப் பெரிய மனிதர்கள் பின்னால்

குடும்பத்திற்குச் சொத்து தேவை என்று மரத்தடியில் ஒரு பிள்ளையாரை நட்டு, அதன் பெயரால் நூறு இரு நூறு ஏக்கரை எழுதி வைத்துவிட்டு, அந்த நிலங்கள் முழுவதும் பின்னர் குடும்பம் அனுபவிக்கும் நிலையில் செய்திருப்பது எத்தனையோ இடங்களில் தெரியும். எனக்குத் தெரிந்த ஒரு நண்பர் வீட்டில், மாடத்தில் ஒரு பொம்மையை வைத்திருக்கிறார்கள். அதை மதிப்பதால் அல்ல, சொத்தை யாரும் கொண்டுபோக இடமிருக்கக் கூடாது என்ற அளவில் ; அதன் பெயரிலே சொத்தை எழுதி வைத்திருக்கிறார்கள். மடத்தின் உரிமையைப் போல, மாடத்தில் இருக்கும் பொம்மையும், மரத்தடிப் பிள்ளையாரும் சொத்தைக் காப்பாற்றித் தருகின்றன. (குறுக்கீடு) மந்திரி "சாமி பொம்மை" என்று சொல்லுகிறார்கள். இனி மந்திரி பொம்மை கூட வைப்பார்கள். இது மந்திரி செய்து கொடுக்கின்ற திட்டமாக இருப்பதால். அப்படிச் சாமி பொம்மைகள் ஏழை மக்களை ஏமாற்ற உதவியாகின்றன.

அடுத்ததாக, " **Any University constituted by any Law** " என்று இருக்கிறது. உண்மையில் பல்கலைக் கழகம் அரசாங்கத்தின் உதவியில்லாமல் அமைய முடியாது. அப்படி அரசாங்கமே உதவி யளிக்கும் போது, எழுதி வைக்கப்பட்டிருக்கும் நிலம் அதிகமாக இருந்தால், அந்த நிலத்தை எடுத்துக்கொண்டு ஈடு செய்ய அரசாங்கமே முன்வந்தால், எந்தப் பல்கலைக் கழகம் மறுக்க முடியும் ? எதுவும் மறுக்க முடியாது. "எனி யூனிவர்சிடி" என்று சொல்கிறார்கள். பல்கலைக் கழகத்திற்கு அரசாங்கத்தின் உதவி தேவைப்படும் : ஆனால் அப்படிப்பட்ட பல்கலைக் கழகம் நில உடமை தேவை என்று கேட்க முடியாது. சட்டத்தில் விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்பதற்கு பல்கலைக் கழக பேராசிரியர்கள் ஏர் பிடித்து உழுகிறார்களா, ஏதோ அங்குள்ள மாணவர்கள் மாடு மேய்க்கின்றார்களா ? இல்லையே? சொத்து அவர்களுக்குத் தேவை உரிமை தேவை, எதற்காக? பணத்திற்காக. அரசாங்கம் அந்தப் பணத்திற்கு ஏற்பாடு செய்யும் என்று உறுதியளித்து அந்த வகையான நிலங்களும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

கூட்டுறவு முறையிலே இயங்கும் சங்கங்களுக்கு இத்தனை ஆண்டுகளுக்கு முன்னால் பதிவு செய்யப்பட்டிருந்தால், விதிவிலக்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயத் துறையிலேயே ஈடுபட்டிருக்கும் "கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டும்தான் விதிவிலக்கு கொடுக்க வேண்டுமே தவிர வேறு எதற்கும் விதிவிலக்குக் கொடுப்பது அவசியமல்ல என்று நான் மனமார கருதுகிறேன்.

அதே போலத்தான் மலைப்பகுதி நிலங்களும். மலைப்பகுதி என்று சொல்லிவிட்டால், எது மலைப்பகுதி என்பதை அரசாங்க அதிகாரிகள் தீர்மானிக்கலாம் என்ற நிலையும் இருக்கிறது. சிறு சிறு குன்றுகளுக்கிடையே நிலங்கள் இருந்தாலும் அவைகளுக்கும் விதிவிலக்கு அளிப்பது முறையற்றதாகும் என்று கருதுகிறேன்.

அதே முறையில் ப்ளாண்டேஷன் என்ற பெயரில்—மலைத் தோட்டப் பயிர்களான காபி, தேயிலை, ரப்பர் இப்படிப்பட்ட பெரிய தோட்டங்களுக்கெல்லாம் விதிவிலக்கு என்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு கமர்ஷியல் க்ராப் என்ற வணிகப் பயிர்கள் பெரிய அளவிலே இருந்தால்தான் தொழிலில் ஊக்கம் இருக்கும் என்று சொன்னார்கள். இவ்வாறு மற்ற நிலங்களுக்கு 30 ஏக்கர் என்று சொல்லிவிட்டு, மலைத் தோட்டங்களுக்கு 100 ஏக்கர் என்றாவது ஒரு உச்ச வரம்பு அளவு வைக்கலாம். ஆனால் அதற்கு அளவே கிடையாது. இதனால், மலைத் தோட்டத்தில் முதலாளிகள் எந்த விதத்திலும் உழைப்பவர்களின் உரிமைகளைக் கவனிக்காமல் இருப்பதற்குத்தான் நாம் வழிவகை செய்கிறோம். இண்டஸ்ட்ரீஸ் முறையில் இத் தொழில் வளரவேண்டுமானால், அதற்கும் ஒரு உச்ச வரம்பு வைக்க வேண்டும். அப்படி அமைப்பது எந்த விதத்திலும் தவறு இல்லை என்பதுதான் என் கருத்து. இன்னும் இதில் இடைவெளி நிலம் **Interspersed among Plantations** என்று இருக்கிறது. பெரிய

தேயிலைத் தோட்டத்துக்கும் இன்னொரு தோட்டத்துக்கும் இடையிலே உள்ள ஏராளமான கரம்பும் காடும் அவைகளைச் சார்ந்தது. இடைப்பட்டு இருக்கிறது என்றும் தொடர்ச்சியாக இருக்கிறது என்றும் ஆகவே அந்த நிலங்களுக்கும் விதிவிலக்கு என்றும் சொல்லப்படுகிறது. இப்படியே விலக்கு அளித்துக்கொண்டிருந்தால் மலைவாழ் ஏழை மக்களுக்கு என்றைக்கு நிலம் சொந்தமாவது? சிறிது அளவு நிலமாவது அந்த நிலமில்லாதவர்களுக்குக் கொடுப்பது என்பது உண்மையானால், அதற்கு வழிகாண வேண்டும். அதற்கு இடமில்லாமல் இரண்டு தேயிலைத் தோட்டங்களுக்கு இடையிலே இருக்கும் நிலங்கள், ரப்பர் காட்டுடன் தொடர்ச்சியாக இருக்கும் நிலங்கள் விதிவிலக்கின் பெயரால் போய் விடுகிறது.

இன்னொன்று வேடிக்கையாக இருக்கிறது. கிராம தான நிலங்களுக்கு விதி விலக்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிராம தான நிலங்கள் கொடுத்தது எந்த நோக்கோடு என்று பார்க்கப்போனால், அது ஏழைகள் விவசாயம் செய்து வாழவே, கிராம தானம் கொடுக்கப்பட்டது. கிராம தானம், பூமி தானம்,கொடுக்கப்பட்ட அந்த நிலங்களுக்கும் விதிவிலக்கு அளிக்கப்படுவது என்றால் என்ன அர்த்தம் இருக்கிறது? சத்திரத்து சோறு ஆளுக்கு ஒரு பொட்டலம் என்று சொல்லாமல் அப்படியே அள்ளிப் போடுவார்கள். அகப்பட்டதை அள்ளிக் கொண்டு போங்கள் என்று சொல்லி விட்டா, சத்திரத்து தானத்துக்கு இலக்கணம் சொல்வார்கள்? கூட்டுறவு முறையில் பயிர்ச்செலவு செய்யப்படும் நிலங்கள் தவிர மற்றபடி கிராம தான நிலங்களுக்கெல்லாம் விதிவிலக்கு அளிப்பதென்பது எந்த வகையில் சிறப்பானது என்று தெரியவில்லை.

அதே போல " எனி லாண்ட் எக்ஸ்க்ளுஸிவ்லி பார் க்ரோயிங் பூயல் ட்ரீ" என்று இருக்கிறது. சவுக்கு போன்ற மரங்கள் அவசியமானதுதான், மக்களுக்கு விறகுக்குத் தேவையானவையே. அப்படிப்பட்ட சவுக்கு வளர்க்கும் நிலங்களுக்கு விலக்குக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். உச்ச வரம்புக்கு உட்படுத்தினால், அதற்குப் பின்னால், சவுக்கு விளையாதா? காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் சில நாட்களுக்கு முன்னால் சொன்னார்கள். "துரதிர்ஷ்ட வசமாக ஆளும் கட்சியில் இருக்கிறேன்" என்று. ஒரு வேளை, நான் நினைக்கிறேன். அதிர்ஷ்ட வசமாக என்று. . . .

SRI R. SRINIVASA IYER: திருப்பித் திருப்பித் தவறாகச் சொல்கிறார்கள் ; நான் சொல்லாததைச்சொல்ல வேண்டாம். சம்பந்தமில்லாமல் பேசுகிறவர்கள் அரைமணி, முக்கால் மணி பேசுகிறார்கள் ; எனக்குப் பத்து பதினைந்து நிமிஷம்தான் கிடைக்கிறது. எனக்கு துரதிருஷ்டவசமாக நேரம் போதவில்லை என்ற அர்த்தத்தில் சொன்னேன்.

DEPUTY SPEAKER: The hon. Member may explain his point after the hon. Member Sri Anbazhagan finishes his speech. The hon. Member Sri Anbazhagan may continue his speech.

SRI K. ANBAZHAGAN: கனம் தலைவர் அவர்களே, அவருடைய துரதிர்ஷ்டம் நேரத்தைப் பொறுத்தது என்று தெரிகிறது. எந்தக் காரணத்திற்காக அவர்கள் சொல்லியிருந்தாலும், எங்கள் துரதிர்ஷ்டம் அவர்கள் அங்கேயிருந்து இப்படிப் பேசுகிறார்களே என்பதுதான். அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்து தென்னம்பிள்ளைக்கு என்று நிலத்திற்கு விலக்களிக்கவேண்டும் என்பது. இப்படிப்பட்ட மரங்கள் வளர்க்க அதிக அக்கறை காட்டவேண்டுமென்றும் அதற்கும் உச்சவரம்பிலிருந்து விதி விலக்கு தேவையென்றும் வற்புறுத்தினார்கள். சவுக்கானாலும், தென்னையானாலும், உச்சவரம்பிற்கு உட்பட்டால் சிறப்பாக வளரச் செய்யமுடியாதா? ஐந்து எக்கரில் சவுக்கு வளர்ப்பவர்கள் வேண்டுமா? ஐம்பது, நூறுடன் வாங்கி சவுக்கு வளர்க்காமலா இருக்கிறார்கள்? உச்ச வரம்புக்கு

உட்பட்டால், பின்னால் அந்த நிலத்தில் தென்னை மரங்கள் வளராது என்று
சொல்லுகிறார்களா ? நான் சொல்லுகிறேன். இவர்கள் தென்னை மரம்
வளர்க்கவேண்டும் என்று சொல்லுவது, மரத்திற்காக அல்ல, மரத்தின்
பின்னாலே மறைந்துகொண்டு இருப்பவர்களுக்காக, மரத்திற்கு பின்னாலே
உயரமாக மறைந்து இருப்பவர்களுக்கு ஒரு சலுகை வேண்டும் என்பதற்
காகத்தான் என்று நினைக்கிறேன். தென்னந்தோப்பை வைத்து வளர்த்து
அதை அரசாங்கத்தினிடமே சில லட்ச ரூபாய்க்கு விற்று, தென்னம்
பண்ணை வைக்கும்படியாகச் செய்து, அதிலே லாபம் சம்பாதிக்கும்
முதலாளிகளுக்கு தென்னை வளர்ச்சியில் அக்கறை இருக்கத்தான்
செய்யும். பட்டுக்கோட்டையிலே தென்னந் தோப்பை அரசாங்கத்தார்
வாங்கியிருக்கிறார்கள். தென்னை மரப் பண்ணை வைப்பதற்காக. விற்ற
வர்களுக்கு லாபம்தான். எந்தப் பண்ணையாக இருந்தாலும் நில
அளவு குறைகிற காரணத்தால், தென்னை மரம் வளராமலா போய்விடும் ?
பனையும் பாக்குங்கூட தோட்டம் பெரியதாக இருந்தால் தான் வளருமா ?
ஒரு வேளை இப்படிப்பட்ட முறைகளால் நீங்கள் நியாயம் வழங்க விரும்ப
வில்லை என்றாலும் நிலப்பிரபுவுக்கு துணை நிற்க விரும்புகிறீர்கள். எந்த
எந்த விதமாக விதி விலக்கு அளித்து முதலாளிகளைத் திருப்திசெய்யலாம்
என்று கருதுகிறீர்கள். மற்றொரு இடத்தில் சொல்லப்படுகிறது.

"Any Land used exclusively for dairy farming or
livestock breeding" என்று அதற்கு உச்ச வரம்பு கட்டக்
கூடாதா ? இந்த அளவுக்கு மேற்பட்ட நிலம் பால் பண்ணைக்கோ—கால்
நடை வளர்ப்புக்கோ ஒதுக்கக் கூடாது என்றும் இவ்வளவுதான் அதற்கு
நிலம் தேவை என்றும் தீர்மானிக்கக் கூடாதா ?

70–வது பிரிவு, நிலத்திலே வளருகிற பயிர்களைப் பாதுகாப்பதற்காக
அல்ல, கால்நடை விலங்குகளைப் பாதுகாக்கவும் அல்ல, ஆளுகிற அமைச்
சர்களை, அவர் தம் காங்கிரசு கட்சியைப் பாதுகாக்க இருக்கிறது. இதிலே
தான் தப்பித்துப் பிழைக்கிறோம் என்று அமைச்சர்கள் சொல்லுவதாக
இருந்தால், அவர்கள் பிழைக்கக் கூடாது என்று வாதம் செய்யவில்லை,
தாராளமாகப் பிழைக்கட்டும். ஆனால், இந்தப் பிரிவை எந்த அளவுக்கு
நீங்கள் சுருக்க முடியுமோ, எந்த அளவுக்கு விதிவிலக்கைக் கட்டுப்
படுத்த முடியுமோ, எந்த அளவுக்கு முதலாளிகளும், மிகப் பெரிய
நிலப் பிரபுக்களும் இந்தப் பிரிவிலே நுழைந்துகொண்டு ஏழைகளை ஏய்த்
துத் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள இடமிருக்காதோ அந்த அளவுக்காவது
வழி செய்தால்தான் இந்தச் சட்டத்தால் ஏதாவது பலன் இருக்கும்.
70–வது பிரிவு இந்தச் சட்டத்தையே விழுங்குகிறது. இந்தச் சட்டத்தின்
விதிகள் அத்தனையும் இந்தப் பிரிவுக்கு அடக்கம். 70–வது பிரிவுக்கு
உட்பட்டு இந்தச் சட்டம் பயனற்றுப் போகாமல், இதைக்கொண்டுவரும்
அமைச்சர் அந்தப் பிரிவு, சட்டத்தை விழுங்காமல் பாதுகாக்க வேண்டு
மென்று நான் எச்சரிக்கிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள் எப்போதுமே விலங்குகளைப்பற்றி எல்லாம்
நன்கு பேசத் தெரிந்தவர். நாய் வாலை ஆட்டுமா ? மாடு வாலை ஆட்டுமா?
என்று ஆராய்ந்தவர். எது எப்படி ஆட்டினால் என்ன லாபம் என்றும்
தெரிந்தவர். முதலாளிகள் எதற்கு வாலை ஆட்டுவார்கள், எதை திர்
பார்த்து வாலை ஆட்டுவார்கள் என்பதும் அமைச்சருக்குத் தெரியும்.
அப்படிப்பட்ட வாலாட்டும் முதலாளிகளைக் காப்பதற்காகக்கூட, ஏழை
களுக்குத் தீமை செய்ய வேண்டாம் என்று வேண்டுகிறேன். இந்தச் சட்
டத்தை வெள்ளத்தோடு ஒப்பிட்டால், சட்டத்திலே வரும் 70–வது பிரிவு
முதலை மாதிரி இருக்கிறது. இந்தச் சட்டம் என்ற வெள்ளத்தில் விதி
விலக்கு என்னும் முதலை மறைந்திருக்கிறது. அந்த முதலையிடம் அமைச்சர்
சிக்கிக்கொண்டிருக்கிறார். ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டு
மென்று தோன்றுகிறது. தயவு செய்து எதிர்க்கட்சிகளினுடைய திருத்
தத்தைச் சிந்தித்துப் பார்த்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு,
என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

25th September 1961]

SRI R. SRINIVASA IYER : On a point of personal explanation sir.

DEPUTY SPEAKER : கனம் அங்கத்தினர் முன்பே பேசி யாய்விட்டதே.

*SRI R. SRINIVASA IYER: நான் அதிகம் பேசப்போவதில்லை. கனம் அங்கத்தினர் பேசுவதைக் கேட்டுவிட்டு, அவர் சொல் கிற மாதிரிதான் நான் பேசினேன் என்று யாரும் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உண்மையான விவாதத்தை சொல்லாமல் விஷயத்தைத் திருத்திச் சொல்லியிருக்கிறார், கனம் அங்கத் தினர் அவர்கள். எதிர்க்கட்சியிலுள்ள அனேகம் பேர்களுக்கு ஜாஸ்தி நேரம் கொடுக்கப்படுகிறதே, எனக்குப் பத்து நிமிஷங்கள்தானே கிடைக் கிறது என்று குறை சொல்லிக்கொண்டேனே தவிர, என்னுடைய கட்சி யில் இருப்பதைப் பற்றி நான் குறையாகச் சொல்லவில்லை. நான் சொல் லாததைச் சொன்னதாக கனம் அங்கத்தினர் திரித்துச் சொல்லிப் பிரசா ரம் செய்யக் கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன். ''பாலும் பழமும்'' '' தாயில்லாப் பிள்ளையும் '' படத்தில் எழுதிப் பார்ப்பவர்களுக்கு புரியும். நான் சொன்னது எங்கே புரியப் போகிறது ?

DEPUTY SPEAKER : It is not a personal explanation.

*SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 70–வது பிரிவின் கீழ் நான் கொண்டுவந்திருக்கும் இரண்டு திருத்தங்களையும் வற்புறுத்திச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இதில் எட்டாவது உட்பிரிவில்,

'' any land used exclusively for growing fuel trees on the date of the commencement of this Act '' என்று இருக்கிறது. விறகுக் கான மரங்கள் வளர்ப்பதற்கு மட்டும் உள்ள நிலம் இருந்தால், அதற்கு விதி விலக்குக் கொடுக்கப்படுகிறது. விதி விலக்குக் கொடுத்ததை நான் வரவேற்கின்றேன்.

ஆனால், என்னுடைய திருத்தம்

'' (viii) any land used exclusively for growing fuel trees on the date of the commencement of this Act and any other land normally used exclusively for growing fuel trees; Provided that such land shall be exempt only so long as such land is not used for any other purpose.'' என்று இருக்கிறது. இந்தச் சட்டம் ஆரம்பமாகிற தேதி, அதாவது 6-4-1960 அன்றைக்கு ஒரு நிலம் காலியாக இருக்கலாம். ஆனால், அந்த நிலத்தில் ஒன்றிரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு சவுக்குத் தோப்பு வைத்திருந்து, அதைச் சமீபத்தில் வெட்டியிருக்கலாம். அந்த நிலமும் இந்த விதி விலக்கில் வரவேண்டுமென்றுதான் என் திருத்தம் கோரு கிறது. நான் குறிப்பிட்ட நிலத்தில், வாலாயமாக சவுக்கு தவிர, வேறு ஒன்றுமே பயிரிட முடியாது. சுமார் ஒன்றிரண்டு மாதங்களுக்கு முன்பு சவுக்குப் பயிரை வெட்டி, 6-4-1960 அன்று அந்த நிலம் காலியாக இருந் தால் விதி விலக்கு இல்லை என்று இப்பொழுது இருக்கிற பிரிவின்படி ஆகிறது. அதற்கும் விதி விலக்கு வேண்டுமென்றுதான் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். சவுக்குப் பயிரிடும் நிலங்களைப் பொறுத்த வரையில் அதற்குச் சில காலம் ஓய்வு கொடுக்க வேண்டும். 'லாண்டு'க்கு 'ரெஸ்ட்' தேவைப்படுகிறது. 'ரெஸ்ட்' காலத்திற்குப் பிறகு நிலத்தை உழுதுவிட்டு சவுக்கு வைக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலங்களில் விறகுக்கான மரம் (Fuel trees) தவிர வேறு ஒன்றும் வளர்க்க முடியாது. சாதா ரணமாக இப்படி விறகு பயிரிடக் கூடிய நிலம் 6-4-1960 அன்று காலியாக இருந்தால், அதற்கும் விதி விலக்குக் கொடுக்க வேண்டுமென்று கோரும் என்னுடைய திருத்தத்தை நான் வற்புறுத்துகின்றேன். சர்க்கார் கொண்டு

வந்திருக்கும் பிரிவுக்கும் என்னுடைய திருத்தத்துக்கும் அதிக வித்தியாசம் இல்லை என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நோடிபை : ஆனதேதியில் ஒன்றுமே இல்லையென்றாலும், அந்த நிலத்தைப் பழையபடி விறகுதான் பயிரிட முடியுமே தவிர, வேறு ஒன்றும் செய்ய முடியாது. எங்கள் பிராந்தியத்தில், குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்தில் இம்மாதிரி சவுக்கு பயிரிடக்கூடிய நிலங்கள் மணற்பாங்கான நிலமாக இருக்கின்றன. திருவொற்றியூரிலிருந்து புதுச்சேரி வரையில் இப்படிப்பட்ட நிலங்களில் சவுக்கு தவிர வேறு ஒன்றும் உற்பத்தி செய்ய முடியாது. சவுக்குப் பயிர் மிகவும் கஷ்டப்பட்டுச் செய்ய வேண்டியது. அம்மாதிரி கட்டத்தில் இருப்பதற்கு விதி விலக்குக் கொடுக்க வேண்டுமென்றுதான் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நிலச்சுவாந்தார்களுக்கு ஏதோ அதிகச் சலுகை கொடுப்பதாகப் பொதுவாக எல்லோரும் பேசுகிறார்கள். நான் கேட்கிறேன்—என்ன அனுகூலம் அப்படிச் செய்துவிட்டார்கள் ? அப்படியொன்றும் அனுகூலம் செய்ததாக எனக்குத் தெரியவில்லை. 'முப்பது ஏக்கர் என்று' வந்த பிற்பாடு அதை வைத்துக் கொண்டு முக்கியமாக வரண்ட பிரதேசமாகிய செங்கற்பட்டு, வடாற்காடு இம்மாதிரி மாவட்டங்களிலே ஒரு குடும்பம்—புருஷன், பெண்ஜாதி, மூன்று குழந்தைகள் உள்ள ஒரு குடும்பம்—நல்லபடியாக ஜீவனம் செய்ய முடியாது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். ஒவ்வொரு கட்டத்திற்கும் ஏதாவது விதி விலக்குக் கொடுக்கிறீர்கள். ஆனால், ஏதாவது பொடி வைத்துவிடுகிறீர்கள். ட்ரிப்யூனல் இருக்கிறது. ஆதரைஸ்டு ஆபீசர் சரிதானா என்று சொல்ல வேண்டுமென்று இருப்பதால், இரண்டு வருஷம், மூன்று வருஷம் ஆகிவிடும். இதையெல்லாம் பார்த்தால், நிலத்தைவிட்டு ஓடும்படியான தருணத்தில் இருக்கிறதே தவிர நிலத்திலே சரியாகப் பயிரிட முடியும் என்று தோன்றவில்லை. (ஸ்ரீ என். கே. பழனிசாமி அவர்கள் குறுக்கீடு) நானே ஒரு விவசாயி. இம்மாதிரி நிலை இருக்கிறதென்று சொல்லுகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய திருத்தத்தில்,

" (xiv) **Land comprised in an efficiently managed farm** ".

என்பதைச் சேர்க்க வேண்டுமென்று கொடுத்திருக்கிறேன். **Efficiently managed farm** இருந்தால், அதாவது ஒரு நிலச்சுவாந்தார், நல்லபடியாக பண்ணை சாகுபடி செய்துகொண்டு வந்தால், அவர்களுக்கும் விதி விலக்குக் கொடுக்க வேண்டும். அதுமாதிரிதான் திட்டக் கமிஷன் ரிபோர்ட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நல்ல மாதிரியாக சாகுபடி செய்யக் கூடிய பண்ணைகளுக்கு விதி விலக்குக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் சாகுபடி செய்கிறவர்களுக்கு உற்சாகம் ஏற்படும். உற்பத்தியை அதிகப்படுத்த முடியும். இதற்காகத்தான் என்னுடைய இரண்டு திருத்தங்களையும் கொடுத்திருக்கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் 'இதெல்லாம் பார்த்தோம், பொறுக்குக் கமிட்டி யோசனை பண்ணியது, என்ன செய்வது ? என்று பதிலில் சொல்லிவிடாமல் நான் சொல்லுவது நியாயமா என்பதைப் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால், பயிரிடுகின்றவர்களுக்கு உற்சாகம் குன்றிவிடும். ஒருவரும் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக இருக்காது. சவுக்கு முதலிய விறகுக்கான மரங்களைப் பயிரிடுவதற்கு ஏற்ற வகையில் என்னுடைய யோசனையை எடுத்துக்கொண்டு நல்ல முறையில் என்னுடைய திருத்தங்களை அங்கீகாரம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

26–வது செக்ஷனுக்கு கனம் அம்மையார் அங்கத்தினர் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்தார்கள். " லைவ்ஸ்டாக் ப்ரீடிங் " என்பதோடு தோப்பு அல்லது ஆர்ச்சர்டு என்பதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று. அப்போதே அதை நான் வரவேற்றேன். ஆர்ச்சர்டு என்றால், அது நல்ல புஞ்சைப் பிரதேசங்களிலும் இருக்கிறது. நல்ல ரெட் லோம் நிலத்தில் கிணறு எடுத்து அதில் ஆர்ச்சர்டு வைக்க வேண்டுமென்றால்,

அதிக முதலீடு செய்து சாகுபடி செய்ய வேண்டும். அம்மாதிரி செய்ய ஒரு உற்சாகம் இல்லாத வகையில் அதற்கு விதி விலக்கு இல்லாமலிருக்கிறது. 1-7-1959-க்கு முன்னே ஆர்ச்சர்டாகவோ, தோப்பாகவோ, கன்வர்ட் செய்யப்பட்டிருந்தால், அதற்குத்தான் விதி விலக்கு என்று போட்டிருப்பதற்கும் நியாயம் இல்லை. பழ வர்க்கங்கள் விருத்தி ஆக வேண்டுமென்றால், 1-7-1959-க்குப் பிற்பாடு வைப்பவர்களுக்கும் உற்சாகம் கொடுத்து, இம்மாதிரி ஆர்ச்சர்டை அதிகப்படுத்தும் வகையில், அதற்கும் விதி விலக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இது சில நிலங்களுக்கு விதிவிலக்கு கொடுக்கிற ஷரா. இந்நிலே யார் பணக்காரன், யார் நிலச் சொந்தக்காரன் என்பது அல்ல பிரச்னை. ஒரு அடிப்படையான நிலத்தினுடைய தன்மையைப் பொறுத்து—எந்தக் காரியத்திற்காக நிலத்தை விட்டிருக்கிறார்கள் என்பதை உத்தேசித்து விதி விலக்கு ஏற்பாடு பண்ணப்பட்டிக்கிறது. முதலில் அரசாங்கத்திற்குச் சொந்தமானது, அப்புறம் டிரஸ்டு, யுனிவர்ஸிடி, இதுபற்றி எல்லாம் ஆட்சேபணை இருப்பதற்கு இடம் இல்லையென்று நினைக்கிறேன். அரசாங்கத்து நிலம், புறம்போக்கு நிலம் என்று லட்சக் கணக்கில் இருந்தால்கூட பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சில நிலம் சில காரியங்களுக்கு அவசியம வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் அவற்றுக்கு இந்த வரம்பு வேண்டியதில்லை என்று செய்தோம். ஏதோ தனிப்பட்டவர்கள் லாபத்திற்காக வைக்கிறார்களே அந்த முறைக்கு இல்லை. அதற்கு ஆட்சேபணை அவசியம் இல்லை. 3-30 p.m.

கல்வி ஸ்தாபனங்கள்பற்றி இங்கே சொல்லிவிடுகிறேன். அப்புறம் ஆஸ்பத்திரி, மற்றது என்று சொல்லிக்கொண்டே போனால், நீண்டு கொண்டே போகும். பின்னாலே பேசிய கனம் அங்கத்தினர் சாப்பாட்டுக்கு அரிசி வேண்டாமா ? மற்றது எதுவானாலும் வாங்கிவிடலாம். ஒரு காலத்தில் அரிசிக்கும் கஷ்டம் வந்தால் என்று பேசினார். கல்வி அபிவிருத்தி என்றால் அதில் எல்லாம் அடங்கிவிடுகிறது. தனித் தனியாக வேண்டாம். இன்னொன்று, இதற்கு விதிவிலக்கு என்பதனால் இஷ்டப்படி அவர்கள் செலவிட முடியாது. செலவுக்கு உச்ச வரம்பு விதிக்கிறோம். அது இன்னொரு பிரிவில் இருக்கிறது. ஆகவே அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். இதில் மற்றொரு ஷராவிலேயே பந்தோபஸ்து இருக்கிறது.

பிற்பாடு ஹில் ஏரியா. அதற்கு நாம் விதிவிலக்குக் கொடுத்திருக்கிறோம். அந்தப் பிராந்தியத்தில் பயிராவது உருளைக்கிழங்கு, டீ, காபி எல்லாம். இவை அக்ரிகல்சரல் இண்டஸ்ட்ரி மாதிரி. அதே போல ஒரு கால்நடைப் பண்ணைக்கு நிறைய மேய்ச்சல் நிலம் வேண்டியிருக்கிறது. சில சரளைக்கல் இருந்தது என்பதனால் அது ஹில் ஏரியாவாக ஆகாது. மலைப்பிராந்தியம் என்ன என்பது வரையறை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே மற்றது எல்லாம் ஆகாது. சட்டசபை அந்தப் பிராந்தியத்தில் கூடியபோது கனம் அங்கத்தினர் போகவில்லை. அதனால்தான் இண்டர்ஸ்பர்ஸ்ட் என்பது பற்றி என்னமோ நினைத்துப் பேசினார்கள். சும்மா இரண்டு பகுதிக்கு நடுவில் ஒரு பாட்சாக இருக்கும். அதிக விஸ்தீர்ணம் இல்லாதது. அது சும்மா பத்து செண்டோ, பதினைந்து செண்டோ தான் இருக்கும். ஆகவே அதனாலே பெருவாரியான நிலம் போய்விடப் போகிறதே என்று நினைப்பதற்கில்லை.

டீ தோட்டமோ, காப்பி தோட்டமோ இவற்றுக்கிடையில் பத்து செண்ட், பதினைந்து செண்டுதான் இருக்கும். ஆகவே அதனால் பெருவாரியான நிலம் வந்துவிடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அதிகமான பரவலான இடம் கிடைக்காது.

ஜூலை 1959-க்கு முன் இருந்த ஆர்ச்சர்டுக்கு விலக்கு அளித்திருக்கிறோம். அவை எல்லாம் நெல் சாகுபடி பண்ணுகிற இடம் இல்லை. அது மாதிரி இப்போது ஏன் கொடுக்கக் கூடாது என்பது ஒரு வாதம் அல்ல.

சும்மா தோப்பு என்ற பெயரால் சவுக்கு, கருவேலம் இவற்றைப் போட்டு விதி விலக்குக் கொடு என்றால் அதுவெல்லாம் முடியாது. அப்படியெல்லாம் செய்யமாட்டார்கள் என்று சொல்ல முடியாது.

'charitable or educational institution, trust, university, commercial undertaking, co-operative society' ஆகவேதான் அந்தத் தேதியில் இருந்தால் விலக்குக் கொடுக்கலாம். அப்புறம் கன்வர்டு பண்ணுவது என்றால் அதெல்லாம் கொடுக்க முடியாது.

கிராம தானம் கொடுப்பது தாராளமாக மனமுவந்து கொடுக்கிற நிலம். அந்தந்தக் கிராமத்தவர்களே கூடக் கொடுத்திருக்கிறார்கள். அது போலவே மேய்ச்சல் நிலம், அதுவும் பல்லடம், தாராபுரம், பக்கம் போய்ப் பார்த்தால் தெரியும். 50 எக்கர் என்பது ஒன்றும் இல்லை. வெறும் கட்டாந்தரை, பொட்டைக்காடு என்பார்களே அந்த வகையில்தான் அவை இருக்கின்றன. எல்லாவற்றையும் யோசித்துத்தான் செய்திருக்கிறோம்.

கிராமத்தில் அரசாங்கம் பொதுவாக வைத்திருக்கிறது, அது இதில் வரவில்லை. பட்டாவாகியிருக்கிற கிரேஸிங் லாண்ட் பற்றியது. காலையில் கூட சொன்னேன், அப்படி 200 எக்கர் இருந்தாலும் அதில் 100 எக்கர் வீடுகள் கட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. சொந்த நிலமாகயிருப்பதில் இந்த அளவாவது கொடுப்பதுதான் நியாயம். பின், கரும்பைப் பொறுத்த வரையில், அது நமக்கு அவசியம். ஷுகர் போர்டு பற்றி வந்தபோது அதைப் பற்றிப் பேசினோம். ஆகவே மேலும் இதைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. பின்னர், இது ஆசாமியைப் பொறுத்ததல்ல. நிலத்தின் தன்மை, தாரதம்மியத்தைப் பொறுத்தே செய்கிறோம். ஆளைப் பொறுத்தல்ல. ஆகவே ஆளைப்பற்றி இங்கு அனாவசியமாகப் பேச வேண்டியதில்லை. திரு பழனிசுவாமி அவர்கள் குறிப்பிட்ட இவ்வளவு ரூபாய் வருமானத்திற்கு மேல் வந்தால் கூடாது என்று சொன்னார்கள். அப்படிச் ரூபாய் செய்தால் "இன்ஸெண்டிவ்" இருக்காது. அப்படிச் செய்தால் அந்த அளவு வருமானம் வரத்தக்க அளவிற்குத்தான் பாடுபடுவானே தவிர அதற்கு மேற்கொண்டு யாரும் பாடுபட மாட்டார்கள். ஆக, சுறுசுறுப்பாக கண்காணிக்கின்றவர்களை சோம்பேறியாக்க வேண்டுமென்று சொல்லுகிறார் திரு பழனிசுவாமி அவர்கள். சின்ன ஏரியாவில் சுறுசுறுப்பாக இன்டன்ஸிவ் கல்டிவேஷன் செய்து எவ்வளவு ஜாஸ்தியாக உற்பத்தியைப் பெருக்கலாம் என்று அவ்விதம் போகும்போது இவ்வளவு வருமானத்திற்கு மேல் வந்தால் விலக்குக் கூடாது என்றால் இன்ஸண்டீவே இல்லாமல் போய்விடும். பின், தென்னந் தோப்பைப் பற்றி வரும்போது, தஞ்சை ஜில்லாவில் நிறைய தென்னந் தோப்புகள் இருந்தன. இரண்டு தடவை ஸைக்ளோன் வந்ததில் நிறைய மரம் அழிந்து போய்விட்டன. ஆகவே, இப்பொழுது தென்னை மரங்கள் வைக்க மாட்டேன் என்கிறார்கள். காற்றடித்துக் கொண்டு போகிறது என்கிறார்கள், ஆக அப்படி வைக்க, ஊக்கம் கொடுத்து வைக்கும் நிலைமைகூட வந்தது. தேங்காய் நமக்கு அவசியமாக இருக்கிறது. அதற்கு வரம்பு வைத்து அந்த நிலத்தை நஞ்சை சாகுபடிக்கு உபயோகிக்கலாம் என்று சொல்வார்களேயானால், பெரும் பகுதி அப்படி உபயோகமாவதில்லை. தென்னந் தோப்பு விருத்தியாகவேண்டும் என்ற எண்ணம் இருப்பதால், விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியும் ரொம்பப் பேர்கள் வைக்க மாட்டேனென்கிறார்கள். அப்படி வைக்க மாட்டேன் என்று சொல்லும்போது, இயற்கை அழிவு ஏற்படுவதால் வைக்க மாட்டேன் என்று சொல்லும்போது அதை இன்னும் கட்டுப்படுத்தினால் தேங்காய் உற்பத்தி குறைந்து போய்விடும். ஆகவே அந்த அடிப்படையில் அதற்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ரிலிஜியஸ் டிரஸ்ட் பற்றி கனம் அன்பழகன் அவர்கள் சொன்னார்கள். அது பற்றி தனி சட்டம் வரவிருக்கிறது. சாகுபடியாளர் பாதிக்கப்படாமல், அவர்கள் அப்புறப்படுத்தப்படாமல் நல்ல வகையில் உற்பத்தியைப் பெருக்குவது பற்றி எப்படி ஏற்பாடு செய்யலாம் என்பதற்காக புது மசோதா கொண்டுவருவது பற்றி சொல்லப்பட்டது. கல்வி நிலையங்கள் போன்றவைகளுக்கு இப்பொழுதுள்ள ரெகுலேஷனே போதும். சாகுபடியாளர்களை அப்புறப்படுத்த

25th September 1961] [Sri M. A. Manickavelu]

முடியாது. அனுவசியமாக நிலத்தில் சாகுபடி செய்பவர்களை அப்புறப் படுத்த முடியாது. ஏற்கனவே அந்தக் கட்டுப்பாடு இருக்கிறது. எக்செம்ஷன் கொடுக்கும் பிராந்தியத்திலும் சாகுபடியாளர்களை அனுவசியமாக அப்புறப்படுத்த முடியாது. இதற்குத் தனி சட்டம் கொண்டு வருவது அவ்வளவு உசிதமாகத் தோன்றவில்லை. நிலத்தைப் பொறுத்த வரை நஞ்சை சாகுபடியை மட்டும் மனதில் வைத்துக்கொள்ளக் கூடாது, பல காரியங்களுக்கு அது உபயோகமாகிறது. மாடு வளர்ப்பதற்கு, டயரி பார்மிங் போன்றவைகளுக்கும் நிலம் தேவை. இந்த விதி விலக்குகள் இல்லை என்றால் நிறைய நிலம் பிரண்டுவிடும் என்று சொல்ல முடியாது. நிலத்தைக் கொடுத்தாலும் இந்த வேலைகளை அவர்கள் செய்ய வேண்டாமா? 2, 3 எக்கர் நஞ்சை சாகுபடி செய்யக்கூட மாடு கொடுத்து, உரம் கொடுத்து, சாப்பாடு கூட கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆறு மாதம், ஒரு வருடம் நிலத்திலிருந்து தானியம் வருவதுவரை சாப்பிடக் கூட தானியம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படியிருக்க, தென்னந் தோப்பில் தென்னம்பிள்ளை காய்க்க, ஐந்து பத்து வருடங்கள் ஆகும் காய்ப்பு வர. ? அப்படியிருக்க, அவர்களுக்கு எவ்வளவு நாட்கள் சாப்பாடு கொடுப்பது இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருப்பதால்தான் விதி விலக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

The amendments of Sri N. K. Palanisami were put and lost.

The amendment of Sri R. Srinivasa Iyer was, by leave, withdrawn.

The amendments of Sri N. Marudhachalam were put and lost.

The amendment of Sri K. G. Palaniswamy Gounder was, by leave, withdrawn.

The amendments of Sri V. K. Ramaswamy Mudaliyar were put and lost.

DEPUTY SPEAKER: The question is—

"That Clause 70 do stand part of the Bill".

The motion was put and declared carried.

A poll was demanded and the House divided thus:

Ayes

Sri A. E. Chandrasekhara Nayagar.
The Hon. Sri C. Subramaniam.
The Hon. Sri M. A. Manickavelu.
The Hon. Sri P. Kakkan.
Sri P. G. Karuthiruman.
Sri P. Jayaraj.
Sri T. M. Kaliannan.
Sri R. Kandasami.
Sri T. Karia Gounder.
Sri P. Kolanda Gounder.
Sri V. S. Manikkasundaram.
Sri A. Mariappan.

The Hon. Sri V. Ramaiah.
Srimathi Kolanthai Ammal.
Sri K. G. Palaniswamy Gounder.
Sri N. S. Ramalingam
Sri S. Ramalinga Padayachi.
Sri G. Narayanaswami Naidu
Sri S. Sadasivam.
Sri R. Srinivasa Iyer.
Sri T. K. Subbiah.
Sri A. R. Subbiah Mudaliar.
Sri R. Subramaniam.
Sri R. Swaminatha Merkondar.
Sri M. William.
Sri N. M. Velappan.
Sri V. Vedayyan.
Sri V. K. Ramaswami Mudaliyar.

Noes.

Sri A. Govindaswamy.
Sri N. K. Palanisami.
Sri K. Anbazhagan.
Sri N. Marudhachalam.
Sri M. P. Subramaniam.

Ayes—28.

Noes—5.

Neutral.—Nil.

Clause 70 was put and carried.

Clause 71.

DEPUTY SPEAKER : The question is—

" That Clause 71 do stand part of the Bill ".

The amendment of Sri M. P. Subramaniam is a negative one and I rule it out of order.

Clause 71 was put and carried.

Clause 72.

DEPUTY SPEAKER : The question is—

" That Clause 72 do stand part of the Bill ".

I rule Sri M. P. Subramaniam's amendment out of order since it is a negative one.

25th September 1961]

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move the following amendment—

In Clause 72 for the words " shall furnish a return " *substitute* the words " shall within such time as may be prescribed furnish a return ".

We must have some time-limit. Otherwise if there is no time-limit we may have to wait indefinitely for the furnishing of the return. That is why time is fixed and that is the purport of this amendment.

The amendment was put and carried.

Clause 72, as amended, was put and carried.

Clause 73.

DEPUTY SPEAKER : The question is—

" That Clause 73 do stand part of the Bill ".

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment—

For sub-clause (2) substitute the following—

" (2) Each Land Tribunal shall consist of the District Munsif having jurisdiction over the area and a person elected either by the panchayat of the area or by the concerned District Development Council ".

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The Clause and the amendment are before the House for discussion.

SRI N. K. PALANISAMI : கனம் சபைத் தலைவர் அவர்களே இதில் என் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன் என்றால், மாகாணத்திலுள்ள எல்லாப் பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு ட்ரிப்யூனலில் ஒரே ஒரு தலைவரை மட்டும் போட்டிருக்கிறது. இந்த மசோதாவைப் பொறுத்த வரையில், எவ்வளவோ பிரச்னைகள் வரும். இவைகளை எல்லாம் இந்த விதத்தில் தீர்ப்பதாக இருந்தால் 10 வருடங்கள் ஆகும். பஞ்சாபில் கன்ஸாலிடேஷன் ஆக்ட் கொண்டுவந்தபோது அதிலுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இதே போன்று நான்கு வருடங்கள் ஆயின. ஆகவே இதை மாற்றி அந்தந்த டிஸ்ட்ரிக்டில் இருக்கக்கூடிய டிஸ்ட்ரிக்ட் முன்சீப்பைப்போடலாம். அதோடு உதவியாக ஜில்லா கௌன்சிலிலிருந்தோ அல்லது பஞ்சாயத்து யூனியனிலிருந்தோ யாரையாவது மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்ளலாம். இச்சட்டத்தின் பிரகாரம் நிலத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. பூமியில் பலவிதமான சிக்கல்கள் ஏற்படலாம். இவைகளை எல்லாம் உடனுக்குடன் தீர்க்க வேண்டுமென்றால், அந்தந்த ஜில்லாக்களில் இந்த மாதிரியான ட்ரிப்யூனல் இருக்க வேண்டியது அவசியம். ராஜஸ்தான், கேரளா போன்ற ராஜ்யங்களில் எல்லாம் இவ்விதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சீக்கிரமாக இதில் ஏற்படக் கூடிய சிக்கல்களைத் தீர்க்கவேண்டியது அவசியம் என்று கருதித்தான் இந்தத் திருத்தத்தை கொடுத்திருக்கிறேன். இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

*SRI R. SRINIVASA IYER : ஸார், அவ்விதம் இரண்டாவது சப் கிளாஸில் திருத்தம் கொடுக்கும்போது இதிலுள்ள ஒன்றுவது சப் கிளாசைப் பார்த்தார்களா என்று தெரியவில்லை. ஒன்றுவது சப் கிளாஸ் பிரகாரம் எத்தனை ரிப்யூனல்களை வேண்டுமானுலும் சர்க்கார் நியமிக்கலாம் என்ற கருத்தைக் கண்டுகொள்ள முடியும், இதில் . . .

"The Government shall constitute as many Land Tribunals as may be necessary for the purposes of this Act." என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதல்லாமல் மட்ராஸில் ஒரே ஒரு ட்ரீப்யூனல் மட்டும் வைத்துக்கொண்டு சமுத்திரக் காற்றை அனுபவித்துக்கொண்டு இந்தச் சட்டப்படி பத்து வருஷம் வரை எதையும் தீர்க்காமல் வைத்துக்கொண்டிருப்பார்கள் என்று இதற்கு அர்த்தமல்ல, இது ஒரு காரணம்.

4.00. p.m. இரண்டாவது லாண்ட் டிரிப்யூனல் ட்யூட்டி என்னென்ன என்று இருக்கிறது. அப்புறம் அப்பெல்லட் டிரிப்யூனலுக்கு பெரிய காரியங்களாக சிலவற்றை மாத்திரம் கொடுத்திருக்கிறது. Authorized officer is all in all ஒவ்வொரு தாலுகாவிற்கும், பஞ்சாயத்து யூனியன் எல்லேக்குக் கூட ஒரு ஆதரைஸ்ட் ஆஃபீஸர் போடலாம். பின்னுல் அவர் கெஜட்டெட் ஆபீஸராக இருக்க வேண்டும் என்றெல்லாம் இருக்கிறது. Land tribunal ஸப்–ஜட்ஜாக இருந்தால் போதும் என்று போட்டு இருக்கிறது. முனிசீபபாக இருக்கக்கூடாது. ஏனென்றல் அவருக்கு சிவில் ஒர்க்கெல்லாம் ஜாஸ்தியாக இருக்கிறது. சப்ஜட்ஜுக்கு அதிக அனுபவம் என்று போட்டிருக்கிறது. சபார்டினேட் ஜட்ஜை நம்பாமல் இருந்தால் என்ன செய்ய முடியும். சிலருக்கு சர்க்காரிலும் நம்பிக்கையில்லை. சர்க்கார் அதிகாரியிடத்திலும் நம்பிக்கை இல்லை— பஞ்சாயத்தில் தேர்ந்து எடுக்கப்பட்டவரையும் சேர்க்க வேண்டுமென்று சொல்லுகிருர்கள். இன்றையதினம் பஞ்சாயத்து எலெக்ஷன், பஞ்சாயத்து எலெக்ஷன் அதிகாரி எலெக்ஷன் ரூல்ஸ், எலெக்ஷனை செட்–அஸைட் செய்ய ரூல்ஸ் என்று இப்படியே போட்டுக்கொண்டு போகிறேம். ஆகவே சரியாக நடத்த இப்போது இருக்கின்றபடி இருந்தால்தான் நல்லது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இந்தத் திருத்தத்தை ஆட்சேபித்து ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அபிஷயலாக இருப்பது நல்லதே தவிர நான்–அஃபிஷியலைப் போட்டால் பலவித கோளாறுகள் உண்டாகும். நல்ல விதமாக நியாயம் கிடைக்காது என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஸார், இதிலே சப்–ஜட்ஜ் போட வேண்டுமென்று இருக்கிறது. திருத்தம் கொடுத்தவர் முன்சீப் போதும் என்று சொல்லுகிருர். ஏன் இப்படி டவுன்–கிரேட் பண்ணுகிருர் என்று தெரியவில்லை. ஸப்–ஜட்ஜாக இருந்தால் சொத்து எவ்வளவாக இருந்தாலும் விசாரணை செய்யலாம். அவ்வளவு பொறுப்பு கொடுத்திருக்கிறது. இன்னும் யாரையோ சேர்க்க வேண்டுமென்று சொல்லுகிருர். விசாரிப்பதெல்லாம் டெக்னிக்கல் மாட்டர்ஸ். கனம் ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் சொன்னதுபோல கோளாறுகளை உற்பத்தி செய்வதாகத்தான் இருக்கும். கோளாறு வேண்டுமானுல் அந்தத் திருத்தம் வேண்டும். கோளாறு இல்லாமல் சுமுகமாக இருக்க வேண்டுமென்ருல் அவசியமில்லை.

The amendment was by leave withdrawn.

Clause 73 was put and carried.

Clauses 74 and 75 were put and carried.

Clause 76.

DEPUTY SPEAKER : The question is :

"That Clause 76 do stand part of the Bill".

25th September 1961]

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment.—

"After sub-clause (2), add the following as sub-clause (3) :—

(3) No stamp duty shall be leviable for appeals under this section."

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்யும்போது ஸ்டாம்ப் ட்யூட்டி இல்லாமல் அப்பீல் செய்ய எகசெம்ஷன் கொடுக்க வேண்டுமென்று திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU. இந்த மாதிரி விஷயத்திலே ஸ்டாம்ப் ஃபீ இருப்பது நல்லது. இல்லாவிட்டால் ஒரு மனுவில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துக்கொண்டே இருக்கலாம். என்னிடம் மனுக்களெல்லாம் வருகின்றன. ஸ்டாம்ப் ட்யூட்டி இல்லாமல் எனக்கு வருவது மாதிரி இருந்தால், ஸ்டாம்ப் ட்யூட்டி இல்லையானால் கவனிக்க முடியாது. காரியங்களைத் துரிதமாகச் செய்ய முடியாது. கோர்ட்டிலே எதை விசாரணை செய்ய வேண்டுமானாலும் ஸ்டாம்ப் ஃபீ இருக்கிறது. இதற்கு மாத்திரம் எப்படி விதி விலக்கு கொடுப்பது என்று தெரியவில்லை. ஆகையால் இது அவசியம் வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

The amendment was put and lost.

Clause 76 was put and carried.

Clauses 77 to 81 were put and carried.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : Sir, I suggest that the House may adjourn now.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned. 4-05 p.m.

III. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. *Statutory Rules and Orders.*

Nil.

B. *Reports, Notifications and other papers.*

212. *Notification issued with G.O. Ms. No.* 1300, *Home, dated* 14*th April* 1961 *regarding amendment to Rule* 26 *of the Rules for the management of the Government reception Homes, Madras* 1957 *issued with Home Department Notification S.R.O. No. A.* 4253 *of* 1957, *dated* 8*th June* 1957 *under section* 44 *of the Madras Children Act*, 1920, (*Madras Act IV of* 1920) *published at page* 428 *to* 434 *of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated* 18*th July* 1957.

213. *Finance Accounts of the Government of Andhra Pradesh for the year* 1959–60 *and the Audit Report* 1960.

214. *Appropriation Accounts of the Government of 'Andhra Pradesh for the year* 1959–60 *and the Audit Report* 1961.

APPENDIX I.

[*Vide* answer to Starred Question No. 1810, asked by Sri A. A. Rasheed at the meeting of the Legislative Assembly held on. 25th September 1961, page 17 supra]

The control measures against fly breeding take the form of improvement of environmental hygiene and general sanitation by elimination of breeding places for flies such as accumulations of rubbish heaps, nightsoil, cow dung, horse dung and filth. The control of adult flies is undertaken through pyrethrum spraying. Such measures are taken with a view to prevent outbreaks of cases of enteric infections. Whenever pearl fishery operations are undertaken in this State, special measures are taken to control fly breeding in and around the area. Special care is also taken to see that the foodstuffs that are sold are kept in hygienic condition fully covered to prevent the flies sitting on them. Besides to arouse the consciousness of the people towards this menace and to enlist public co-operation for the sanitary measures taken by the health authorities to check the growth of flies, pamphlets are distributed, magic lantern and cinema shows are conducted and lectures are given.

2. To focus attention on this problem, an Anti-fly Week beginning from 1st July 1961 was celebrated in this State and throughout the country at the instance of the Government of India. Instructions were issued by this Government to celebrate the week in this State on the following lines:—

(1) Posters, leaflets and pamphlets on the eradication of flies might be prepared and distributed to the public during the celebration of 'Anti-fly Week' by the local bodies in consultation with the Health Officer of the locality.

(2) Films on public health available in the office of the Director of Public Health as well as with other agencies might be obtained on loan and exhibited in prominent places in the municipality, district board or panchayat area and also in schools.

(3) Wide publicity for the observance of the week might be given by publishing suitable and topical articles in the local dailies by prominent persons.

(4) Special cleaning campaigns particularly in slum areas might be undertaken by the local authorities.

(5) Schools and colleges should be asked to take part in the celebrations; essay competitions might be arranged for different age groups in each institution and prizes and certificates might be awarded for the first three. Similarly certificates might be given to the Panchayat Union/Panchayat Councils in each district which have taken the most effective measures for controlling the fly nuisance during its heaviest seasons.

(6) The All-India Radio might be requested to include a talk on the celebration of Anti-fly Week in their programme.

The Week was celebrated accordingly.

25th September 1961]

APPENDIX II.

[*Vide* Answer to Starred Question No. 1814, asked by Sri N. K. Palanisami on behalf of Sri M. Kalyanasundaram at the meeting of the Legislative Assembly held on 25th September 1961, page 19 supra.]

A.—During the Third Plan period, the following schemes are proposed :—

(1) Twenty stores societies will be given financial assistance by way of loan of rupees twenty thousand (Rs. 2 ,000) each for the installation of oil crushing and grinding machinery.

(2) Fifty stores societies will be given assistance by way of loan of rupees five thousand (Rs. 5, 00) each for the installation of coffee grinding machinery.

(3) One hundred stores societies will be given assistance by way of subsidy on a graded scale of rupees nine hundred (Rs. 900) per annum each during the first year rupees six hundred (Rs. 600) per annum during the second year and rupees three hundred (Rs. 300) per annum during the third year for the employment of paid staff.

(4) One hundred stores societies will be given assistance at the rate of rupees two thousand and five hundred (Rs. 2,500) each by way of State participation in their share capital.

2. In addition to the Plan schemes, the following additional schemes for loan assistance will be implemented in 1961-62:—

(1) Five stores societies at the rate of Rs. 20,000 each for the provision of godowns-*cum*-office buildings ;

(2) two societies at the rate of each Rs. 8,000 for purchase of Lambretta; and

(3) two societies at the rate of Rs. 1,000 each for purchase of tricycles.

APPENDIX III.

[*Vide* Answer to starred Question No. 1817 asked by Sri T. S. Ramaswami at the meeting of the Legislative Assembly, held on 25th September 1961, page 21 supra.]

A.—(*a*), (*b*) and (*c*):—Only five of the six Co-operative Farming Societies referred to in the question are working, the sixth, viz., Sivagiri Co-operative Joint Farming Society, having been transferred to Andhra Pradesh on 1st April 1960. The particulars regarding the five societies are given below :—

1. *Sendivakkam Land Colonization Co-operative Society* :—This society worked at a profit during 1958-59. The amount of loss sustained by the society during 1959-60 was only Rs. 2 The loss is ascribed to the inadequency of irrigation facilities, failure of the monsoon and poor soil.

Capital invested .. .. .. Rs. 627

Extent of land under cultivation .. 13·77 acres.

Financial help given by Government—

Loan .. Rs. 6,092

Subsidy .. Rs. 16,125

No wages were paid as members cultivated lands individually as tenants.

2. *Karanaipuducheri Land Colonization Co-operative Society:*—The society was working at a profit till 1958–59. In 1959–60 it incurred a loss of Rs. 33·80. The loss is ascribed to the expenditure incurred by the society on celebrating its anniversary.

Capital invested .. .. .. Rs. 455

Extent of land under cultivation .. 84·03 acres.

Financial help given by the Government—

Loan .. Rs. 5,725

Subsidy .. Rs. 5,020

No wages were paid by the society as members cultivated lands individually as tenants.

3. *Siruseri Land Colonization Co-operative Society.*—The society had neither a profit nor loss during 1958–59. In 1959–60 it made a profit of Rs. 66.

Capital invested .. .. .. Rs. 279

Extent of land under cultivation .. 112·99 acres.

Financial assistance given by the Government—

Loan .. Rs. 6,950

Subsidy .. Rs. 5,220

No wages were paid by the society as members cultivated lands individually as tenants.

4. *Nelvoy Land Colonization Co-operative Society.*—Till 1953 the society was working satisfactorily. The working of the society was hampered due to the riot in 1952 and the withdrawal of the Palar River Pumping Scheme. The society is incurring loss.

Capital invested .. .. .. Rs. 750

Extent of land under cultivation .. 219·50 acres.

Financial assistance given by the Government—

Loan .. Rs. 11,535

Subsidy .. Rs. 8,699

25th September 1961]

No wages were paid by the society as members cultivated and individually as tenants.

5. *Lattur Co-operative Joint Farming Society*.—The land at the disposal of the society had been fallow and the soil was alkaline. The society had to resort to heavy manuring and deep tractor ploughing to improve soil fertility resulting in high expenditure. The financial condition has since improved and it is expected to work at a profit in the current year.

The society commenced farming operations during 1959–60 only and a sum of Rs. 11,367 was paid as wages to non-members.

Capital invested	.. .. ..	R. 1,569
Extent of land under cultivation	..	53 acres.

Financial assistance given by the Government—

Loan	..	Rs. 13,150
Subsidy	..	Rs. 11,150